புனா ஒப்பந்தம்

ஒரு சோகக் கதை

தொ. பரமசிவன்

புனா ஒப்பந்தம்

ஒரு சோகக் கதை

தொ. பரமசிவன்

மீள் பார்வை

அகழி பதிப்பகம்
&
Endless Readers

Endless Readers
A writer only begins a book A reade Finishes it.

https://endlessreaders.in

புனா ஒப்பந்தம்:

ஒரு சோகக் கதை

ஆசிரியர்: தொ. பரமசிவன்

வெளியீடு: Endless Readers & அகழி பதிப்பகம்

முதல் பதிப்பு: பிப்ரவரி 2022

தொலைபேசி எண்: 9176622598 / 6384211842

மின்னஞ்சல்: admin@endlessreaders.in

பக்கம்: 32

அட்டை வடிவமைப்பு: நெகிழன்

நன்கொடை : ரூ. 10

புத்தகங்களை இணையத்தில் பெற :

https://endlessreaders.in

Endless Readers

A writer only begins a book A reader Finishes it.

பதிப்புரை

தொ.ப வின் எழுத்தென்பது எளிய மக்களை நேரடியாக அணுகக் கூடியது. எளிமையாக எடுத்துரைப்பது.

சாதி, சமயம், பண்பாடு போன்றவற்றின் பல கூறுகளை தொ.ப தொட்டிருப்பார். அந்த வகையில் 'புனா ஒப்பந்தம்' ஒரு சோகக் கதை கட்டுரை அத்தனை நேர்த்தியாக தனது சொந்த அனுபவத் திலிருந்து தொடங்கி சுதந்திர இந்தியாவுக்கும் முன் கொண்டு வந்து விட்டிருப்பார். அவற்றைப் படித்த பிறகு நாம் சமகாலப் போக்கோடு இந்தியாவையும், காந்தியையும், அம்பேத்கரையும் பொருத்திப் பார்த்துத் தேட ஆரம்பிப்போம்.

'இரட்டை வாக்குரிமையே தாழ்த்தப்பட்டோருக்கான சிறப் புரிமை' எனப் படிக்கும்போது, அதன் தேவை குறித்தும் அதற்காக உழைத்த டாக்டர். அம்பேத்கர் குறித்தும் வருந்தவும், சிந்திக்கவும் வைக்க நிறைய காட்சிகளுண்டு. நாட்டில் ஆங்காங்கே தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான வாக்கு வன்முறைகளையும் தேர்தல் கால படுகொலைகளையும் நாம் கணக்கில் கொண்டால் எண்ணிலடங்காதவை.

இந்த இரட்டை வாக்குரிமைக்கான ஒப்பந்தத்திற்குப் பிறகு அம்பேத்கர் விடுகிற அறிக்கைகளாகட்டும் மனமொப்பாத நிலையில் சமாதானமாக கையெழுத்திட்டு நொந்துபோய் விட்ட அறிக்கை களாகட்டும் அத்தனையும் வலி நிறைந்த வரலாற்று ஆவணம்.

பெற்ற பிள்ளையின் எதிர்காலம் குறித்து ஒரு பெற்றோராக சிந்திக்கிற நிலையிலிருந்து இந்தியாவின் ஒட்டுமொத்த ஒடுக்கப்பட் டவர்களுக்காக சிந்தித்ததை காகிதத்தைப் புரட்டிப் படித்துவிட்டு கடந்து போகிற மனநிலையைத் தரவில்லை.

இறுதியில் தனித்தொகுதிக்கான ஒப்பந்தம் மட்டும் பிரிட்டி ஷாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகவல் ஒருபுறமிருக்க., இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து சில ஆண்டுக்குப் பிறகு அம்பேத்கர்

சிலவற்றை எழுதியுள்ளதாக படிக்கும்போது சட்டென எனக்குத் தோன்றியது இதுதான். அம்பேத்கர் காந்தியின் பேரிலான கரிசனத்தில் ஒத்துப்போகாமல் இருந்திருந்தால் கோட்சே காந்தியை சுட்டிருக்கவேத் தேவையில்லை. கோட்சே போன்ற சனாதனி அல்ல அம்பேத்கர். ஆனால் காந்தி சனாதனியா என நீங்கள் கேட்டால் புனா ஒப்பந்த அரசியல் பின்னணியை நுட்பமாக ஆராய்பவர்களுக்குத் தெரியும்.

லாப நோக்கில்லா இச்சிறு வெளியீடு ஒடுக்கப்பட்ட மக்கள் அரசியல் அதிகாரம் பெறவும், அம்பேத்கரோடு களத்தில் நின்றவர்களும் எதிரணியில் நின்றவர்களும் யார் யாரென அறியவும், பள்ளிக் கல்லூரி மாணவர்களுக்கு ஓர் உபயோகமுள்ள எளிய மொழியிலான கட்டுரை யாகவும் அடுத்த நிலைக்கு இட்டுச் செல்லத் தூண்டுகோலாகவும் இருக்கு மென நம்புகிறோம்.

- பதிப்பகத்தார்

புனா ஒப்பந்தம்

மதுரை நகரத்தின் தெருக்களிலும் பேருந்துகளிலும் 1992 செப்டம்பர் மூன்றாம் வாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பொன்றின் சார்பில் சுவரொட்டி ஒன்று காணப்பட்டது. 'படுபாதகன் காந்தி புனா ஒப்பந்தத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களைக் கழுத்தறுத்த நாள் செப்டம்பர் 24' என்பது அந்தச் சுவரொட்டியின் வாசகம் ஆகும். பொது மக்கள், அரசியல்வாதிகள், காவல்துறையினர் ஆகியோரை மட்டுமின்றி வரலாற்று உணர்வு உடையவர்களையும் வரலாற்றுக் கல்வித்துறை சார்ந்தவர்களையும் அந்தச் சுவரொட்டியின் சொற்கள் அதிர்ச்சியடையச் செய்தன. புனா ஒப்பந்தம் 1932ல் ஏற்பட்டு, அறுபது ஆண்டுகள் கழித்து ஒப்பந்தத்திற்குக் காரணமானவர்கள் கையெழுத்திட்டவர்கள் அனைவரும் இறந்துபோன பின்னர் அந்த ஒப்பந்தம் கடுமையான சொற் களால் விமர்சனம் செய்யப்படுகிறது. ஒரே நூற்றாண்டுக்குள் முதல் தலைமுறையினர் 'மிகப் பெரிய அரசியல் சாதனை' என்று கொண்டாடி யதை அடுத்த தலைமுறையினர் இத்தனை அளவு குறைத்து மதிப்பிட முடிந்தது எப்படி? ஒரு தலைமுறைக் காலத்திற்குள் (30 ஆண்டுகள்) நடந்த தலைகீழ் மாற்றத்திற்கான காரணம் என்ன? இந்தச் சுவரொட் டிக்கு மாற்றாக, இந்தச் சுவரொட்டியால் தாக்கப்பட்ட தேசிய இயக்க அரசியல்வாதிகள் (ஒரு காலத்தில் தேசிய இயக்கத்தில் இருந்து இப் பொழுது பல பெயர்களில் தேசிய அரசியல் கட்சிகளாகப் பிரிந்து நிற்பவர்கள்) ஏன் மாற்றுக் கருத்துக்களை முன் வைக்கவில்லை? இந்த கேள்விகளுக்கான விடையாக புனா ஒப்பந்தம் எழுந்த சூழ்நிலை யினையும் அதன் பின் விளைவுகளையும் வரலாற்று உணர்வுடன் காண முற்படுவதே இச்சிறு வெளியீட்டின் நோக்கமாகும்.

இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றிலும், தாழ்த்தப்பட்டோர் இயக்க வரலாற்றிலும் நடந்த குறிப்பிடத்தக்க ஒரு அரசியல் நிகழ்ச்சி புனா ஒப்பந்தம் ஆகும். காங்கிரசு இயக்கத்திற்கும் அம்பேத்கர் இயக்கத்திற்கும் இடையிலான இந்த ஒப்பந்தம் 1932ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் நாள் சனிக்கிழமையன்று புனா நகரில் உள்ள ஏரவாடா சிறையில்

காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்த காந்தியடிகள் முன்னிலையில் ஏற்பட்டது. காந்தியடிகளின் ஒப்புதலின் பேரில் அன்று மாலை புனா நகரில் இராமகிருஷ்ண பண்டார்கர் சாலை முதலாம் எண் இல்லத்தில் இரு தரப்பிலுமாக மொத்தம் 23 அரசியல்வாதிகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். காந்தியடிகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை. அன்று அவர் சிறையில் உண்ணாவிரதம் தொடங்கிய 4வது நாள். அன்றே உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ள தாம் தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் பிரதமருக்கு காந்தி தந்திச் செய்தி அனுப்பினார். அதே போல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தலைவர்களில் சர். தேஜ்பகதூர் சாப்ரு, பண்டித மதன் மோகன் மாளவியா ஆகியோரும் பிரிட்டிஷ் பிரதமருக்கு ஒப்பந்தம் ஏற்பட்ட செய்தியை தந்திச் செய்தியாக அனுப்பினர்.

மறுநாள் காலை புனாவில் இருந்து பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்று அன்று பிற்பகல் இரண்டு மணிக்குப் பம்பாயில் நடைபெற்ற 'இந்துக்களின்' மிகப் பெரிய கூட்டம் ஒன்றில் மேற்குறித்த தலைவர்கள் ஒப்பந்தச் செய்தியை மக்களுக்கு விரிவாக அறிவித்தனர். அன்று பம்பாயில் மேலும் 18 தலைவர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக் கொண்ட செய்தி அதற்கு மறுநாள் (26.09.1932) கிடைத்தது. அன்று மாலை 5.15 மணிக்கு எரவாடா சிறையில் மனைவி கஸ்தூரிபா காந்தி ஆரஞ்சுப் பழச்சாறு தர காந்தியடிகள் தமது 6 நாள் 5 மணி நேர உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். அப்போது கவிக்குயில் சரோஜினி நாயுடு, மோதிலால் நேருவின் மனைவி, சர்தார் வல்லபாய் படேல், காந்தியடிகளின் செயலாளர் மகாதேவ தேசாய் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த ஒப்பந்தம் காங்கிரசு இயக்கத்திற்கும் அம்பேத்கர் இயக்கத் திற்கும் இடையிலான ஒப்பந்தமா? அல்லது சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தமா? என்பதை நுனித்து ஆராய வேண்டும். அம்பேத்கர் இது தன்னுடைய இயக்கத் திற்கும் காந்தியாரின் தலைமைக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் என்றே கருதினார். காந்தியாரோ தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட அனைத்து மக்க ளுக்கும் பிரதிநிதியான காங்கிரசுக் கட்சிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் இரண்டு பெரும் பிரிவுகளுக்கும் (ஒன்று அம்பேத்கர் தலைமையிலானது மற்றொன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.சி. ராஜா தலைமையிலானது) இடையில் ஏற்பட்ட ஒப்பந்தமாகக் கருதினார். எனவே ஒப்பந்தம் ஏற்பட்டதற்காக அசூவர் தனது 'இந்து நன்றிகளை' (Hindu gratitudes) அம்பேத்கருக்கும், எம்.சி. ராஜாவுக்கும் தனித்தனியாகத் தெரிவித்துக் கொண்டார்.

உண்மையில் ஒப்பந்தத்தில் உயர்சாதி இந்துக்களின் சார்பாகக் கையெழுத்து இட்டவர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர். ஒரு பிரிவினர் காந்தியடிகளின் தலைமையை ஏற்று காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த ராஜாஜி, தேவதாஸ் காந்தி, இராசேந்திர பிரசாத் ஆகியோர். மற்றொரு பிரிவினர் இந்து மிதவாதத் தலைவர்கள் (Hindu Liberal Leaders) எனப்பட்ட பண்டித மதன் மோகன் மாளவியா, தேஜ் பகதூர் சாப்ரு, ஜி.டி.பிர்லா, எம்.ஆர். ஜெயகர் ஆகியோர். இந்து மகாசபை என்ற அமைப்பு டாக்டர் பி.எஸ். மூஞ்சே தலைமையில் இது போன்றதொரு ஒப்பந்தத்தை மூன்று மாதங்களுக்கு முன்னதாக அம்பேத்கரை எதிர்த்து நின்ற எம்.சி. ராஜாவோடு செய்து கொண்டிருந்தது.

இந்த உண்ணாவிரதத்தையும் ஒப்பந்தத்தையும் பற்றி காந்தியடி களின் பணியாளராக இருந்த பியாரிலால் ஒப்பந்தம் முடிந்த மூன்று மாதத்திற்கு உள்ளாக THE EPIC FAST என்ற ஆங்கில நூலை எழுதி வெளியிட்டார். இப்புத்தகத்திற்கு இராஜாஜி ஒரு முன்னுரை கொடுத் திருந்தார். இப்புத்தகத்தை ஒரு 'பாஸ்வெலியானா' என்று அம்பேத்கர் விமர்சித்தார். இதற்கு மாற்றாக டாக்டர் அம்பேத்கர் 1939-இல் புனா ஒப்பந்தம் என்ற நூலில் தன்னுடைய கருத்துக்களை வெளியிட்டார். 'புனா ஒப்பந்தத்திலிருந்து காங்கிரஸ் சாற்றை உறிஞ்சிக்கொண்டு சக்கையை, தீண்டத்தகாதவர் எனக் கருதப்படுவோரின் முகத்தில் வீசி யெறிந்தது என்று கூறி இந்த நீண்ட சோகக் கதையினை முடிக்கலாம்' என்பது தான் அந்தப் புத்தகத்தின் கடைசி வாக்கியமாகும்.

இந்தியாவின் எதிர்கால அரசியல் சட்ட வரைவுக்காக இங்கிலாந்து அரசு ஒரு குழுவினை 1928இல் அமைத்தது. ஜோக்கன் சைமன் தலை மையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவை காங்கிரஸ் இயக்கத்தினர் வன்மையாக எதிர்த்தனர். அதன் பின் விளைவாக இந்தியாவின் அனைத்து தரப்பினரையும் அழைத்துப் பேச இங்கிலாந்து அரசு இலண்டனில் வட்டமேசை மாநாடு ஒன்றைக் கூட்டியது. 1930ஆம் ஆண்டு நவம்பர் 12 முதல் 1931 ஜனவரி 19 முடிய நடைபெற்ற இம்மாநாடு முதல் வட்டமேசை மாநாடு ஆகும். காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் பலர் சிறையில் இருந்ததால் காந்தியடிகள் தலைமையிலான காங்கிரஸ் இயக்கம் இந்த மாநாட்டை புறக்கணித்தது. இந்த மாநாட்டில் இந்து மகாசபையின் (Hindu Mahasabha) டாக்டர்.பி.எஸ். மூஞ்சேவும் இந்து மிதவாதக் கட்சித் தலைவர்களான சர். தேஜ் பகதூர் சாப்ரு, ரைட் ஆனரபில் சீனிவாச சாஸ்திரி, எம்.ஆர். ஜெயகர், தாழ்த்தப்பட்டோர் இயக்கத்தின் சார்பாக டாக்டர் அம்பேத்கர் (தமிழ்நாட்டைச் சேர்ந்த) ராவ் பகதூர் ரெட்ட மலை சீனிவாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களைத்

தவிர முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் ஆகியோர்களின் சார் பாளர்களும் கலந்துகொண்டனர். இவர்கள் அனைவரும் முறையாக ஆங்கிலேய அரசால் அழைக்கப்பெற்ற பிரதிநிதிகள் ஆவர். மிகப்பெரிய இயக்கமான காங்கிரஸ் இயக்கம் கலந்து கொள்ளாததால் இம்மாநாட்டில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த மாநாட்டில் வகுப்பு வேறுபாட்டு உணர்வுகள் (Communal Difference) கூர்மையாக நிலவியதாக 'இந்து' நாளிதழ் குறிப்பிடுகின்றது.

இந்த மாநாட்டைப் பற்றி டாக்டர் அம்பேத்கர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்கள் இந்துக் களிலிருந்து ஒரு தனிப் பிரிவினராக அங்கீகரிக்கப்பட்டது மட்டு மல்லாது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எழுதப்படும்போது அவர் கள் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் எனும் உரிமையைக் கொண்ட முக்கியத்துவம் வாய்ந்தது இந்த மாநாடு ஆகும். இந்த மாநாட்டில் அம்பேத்கர் இந்திய தாழ்த்தப்பட்டோரின் நிலைப்பாட்டினை விளக்கும் போது 'பணிவான போக்கு முடிந்து எதிர்ப்புணர்ச்சி விளக்கும் தொடங்கு மிடத்தை அதிகாரத்தில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மனிதர்களைக் கொண்ட அரசாங்கம் ஒன்றே எங்களுக்கு அமைய வேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் அம்பேத்கரின் செயல்பாடு குறித்து இலண் டனிலிருந்து வெளிவந்த 'சண்டே கிரானிக்கல்' என்ற இதழ் டாக்டர் அம்பேத்கர் மனதளவில் ஒரு உண்மையான தேசியவாதி. அவரைத் தங்கள் பக்கம் இழுக்க விரும்பிய பிரிட்டிஷ் அதிகாரத்தை எதிர்த்து அவர் ஒரு புறம் உறுதியாகப் போர் நிகழ்த்தினார். மறுபுறம் இன்னொரு கடுமையான வேலையும் அவருக்கு இருந்தது. தன்னுடைய சகோதரச் சார்பாளரான ராவ் பகதூர் சீனிவாசனை தேசியத் தளத்துக்கு இழுத்து வருவதுதான் அது' என்று எழுதியது. இரண்டாம் வட்ட மேசை மாநாட்டிற்கு முன்னர் 1931 ஜனவரி 21 காந்தியடிகள் சிறையில் இருந்து வெளிவருகிறார். அதே ஆண்டு பிப்ரவரி 17இல் அரசுப் பேராளர் (Viceroy) இர்வினைச் சந்திக்கிறார். மார்ச் 4ஆம் தேதி இருவருக்கும் ஒப்பந்தம் நடக்கிறது. காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி வைக்கிறார்.

இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ள காங்கிரஸ் உடன்படுகிறது. இரண்டாம் வட்டமேசை மாநாடு தொடங்குவதற்கு முன்னர் ஆகஸ்டு 14இல் காந்தியடிகளின் வேண்டுகோளின் பேரில் அவரை அம்பேத்கர் பம்பாயில் சந்திக்கிறார். இரண்டாம் வட்ட மேசை மாநாடு செப்டம்பர் 12இல் தொடங்குகிறது. மாநாட்டில் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளாக மீண்டும் அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் கலந்து கொள்கின்றனர். காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து காந்தியடி

கள், 'இந்துக்களின் தலைவர்களாக பண்டித மதன்மோகன் மாளவியா, கஸ்தூரி ரங்க ஐயங்கார் முதலியோர் கலந்து கொள்கின்றனர்.

1931ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் அன்று நடைபெற்ற கூட்டமைப்புக் குழுவில் (Federal Structure Committee) முதற் கூட்டத்தில் பேசும் போது தாழ்த்தப் பட்டோருக்கான தனித் தொகுதிக் கோரிக்கையை காந்தியடிகள் எதிர்த்தார். 'இந்தியா முழுமையிலும் உள்ள எந்த ஒரு அங்கத்தின் அல்லது தனி நபரின் நலன்களைப் போலவே தீண்டத் தகாதவர்கள் எனக் கருதப்படுபவர்களின் நலன்களும் காங்கிரசுக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆதலின் அவர்களுக்கு மேலும் அதிகப்படியான எந்த விதமான சிறப்புப் பிரதிநிதித்துவத்தையும் நான் கடுமையாக எதிர்க் கிறேன்' என்பது அவர் தம் வெளிப்படையான வாதமாகும்.

அதே கூட்டத்தில் அன்று மாலையில் பேசிய டாக்டர் அம்பேத்கர் இதனைக் கடுமையாக எதிர்த்தார். அம்பேத்கரின் கடுமையான எதிர்ப் பினைக் கண்ட காந்தியடிகள் இந்தியக் குழுக்களிடையே ஒரு சமரசத்தை எட்டுவதற்காகக் கூட்டத்தை சில நாட்கள் ஒத்திவைக்க பிரிட்டானியப் பிரதமரை வேண்டிக் கொண்டார். இந்த வேண்டு கோளை முஸ்லீம்களின் பிரதிநிதியான சர் அலி இமாமும். இந்து மித வாதிகளின் பிரதிநிதிகளான பண்டித மதன்மோகன் மாளவியாவும் ஆதரித்தனர்.

இந்தக் கால அவகாசத்தில் காந்தியடிகள் முஸ்லீம்களோடு ஒரு சமரச ஒப்பந்தத்தை உருவாக்கப் போகிறார் என்பதை டாக்டர் அம்பேத்கர் உணர்ந்து கொண்டார். எனவே தன் கருத்தை அவர் ஆணித்தரமாகக் கூறத் தொடங்கினார். 'சமரசப்பேச்சு வார்த்தையை மேற்கொள்பவர்கள் தாங்கள் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு சிறுபான்மையினர் குழுவினால் முன் அதிகாரம் அளிக்கப்பட்டு நியமிக்கப்பட்டவர்கள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். திரு. காந்தி அவர்களின் அல்லது அவர் யாருடன் பேச்சு வார்த்தையை மேற்கொள்ள விரும்புகிறாரோ அந்தக் கட்சிகளின் பிரதி நிதித்துவத்தன்மை எதுவாயிருப்பினும் அவர்கள் எங்களைக் கட்டுப்படுத்தும் நிலையில் நிச்சயம் இல்லை. நிச்சயமாக இல்லவே இல்லை. இக்கூட்டத்தில் இதனை மிகவும் ஆணித்தரமாகக் கூறிக்கொள்கிறேன்.

மீண்டும் செப்டம்பர் 8ஆம் நாள் கூடிய சிறுபான்மைக் குழுக் கூட்டத்தில் இந்த இடைப்பட்ட காலம் பயனற்றுப் போய்விட்ட தென்றும் தன்னுடைய முயற்சி தோல்வியடைந்து விட்டதென்றும், அதற்காகத் தான் வருந்துவதாகவும் காந்தியடிகள் கூறினார். இந்த எட்டு நாட்களுக்குள் நடந்தவையாக டாக்டர் அம்பேத்கர் இந்தியாவிற்கு வந்த

பின்னர் கூறிய செய்திகள் வரலாற்று மாணவர்களுக்கு அதிர்ச்சியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தக் கூடியனவாகும்.

இந்தக் கால இடைவெளியில் காந்தியடிகள் முஸ்லீம்களோடு ஒரு உடன்பாட்டிற்கு வர முயன்றார். குறிப்பாக டாக்டர் ஆகாகானை பலமுறைச் சந்தித்தார். 'முஸ்லீம்களின் 14 கோரிக்கைகளையும் காங்கிரசு ஏற்றுக் கொள்ளும், தாழ்த்தப்பட்டவர்களின் தனித்தொகுதி கோரிக்கையினை முஸ்லீம்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது' என்று ஒரு ஒப்பந்தம் செய்ய முயற்சி எடுத்தார். இவையே காந்தியடிகள் மீது அம்பேத்கர் சுமத்திய கடுமையான குற்றச்சாட்டுகள் ஆகும். காங்கிரசுக்கும் முஸ்லீம் பிரதிநிதிகளுக்கும் இடையே ஏற்பட இருந்த ஒப்பந்த நகலை எட்டு ஆண்டுகள் கழித்து 1939இல் பாகிஸ்தான் மீதான சிந்தனைகள் (Thoughts on Pakistan) என்ற புத்தகத்தின் பிற்சேர்க்கையாக அம்பேத்கர் வெளியிட்டார். தேசிய இயக்கத்தவர்கள் யாரும் அதற்கு இன்றுவரை மறுப்புத் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தகுந்த செய்தியாகும்.

1931 செப்டம்பரில் கூடிய இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் (அல்லது வட்டமேசை மாநாட்டின் இரண்டாவது சுற்றில்) எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. மாநாட்டின் இறுதியில் பிரிட்டன் பிரதமர், 'பிரதமர் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம்' என்ற எழுத்து உறுதி மொழியினை மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரிடமும் கேட்டுப் பெற்றார். தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளான டாக்டர் அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் அப்படி ஒரு உறுதிமொழியை எழுத்தில் கொடுக்காமலேயே இந்தியா திரும்பி விட்டனர்.

இந்த மாநாட்டில் காந்தியடிகளின் செயல்பாடு குறித்து இலண்டனிலிருந்து வெளிவந்த 'தி டைம்ஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகை பின்வருமாறு எழுதியது. விவாதத்தின் போதான அவரின் (காந்தியின்) குறுக்கீடுகள் பிரதானமாகக் கொள்கைப் பரப்பாளரின் தன்மையை ஒத்திருந்தனவேயன்றி பேசுகின்ற விசயத்திற்கு உண்மையான தொடர்பின்றி இருந்தன. மாநாட்டுப் பணிக்கான உண்மையான ஆக்கப்பூர்வமான பங்கினை அவர் ஆற்றவில்லை. காந்தியடிகள் இறந்த மறுநாள் அன்றும் அப்பத்திரிகை இதே கருத்தினை வெளியிட்டது.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் நிறைவடையாத காந்தியடிகள் நாடு திரும்பிய ஒரு வாரத்திற்குள் (1932 ஜனவரி முதல் வாரம்) கைது செய்யப்படுகிறார். பிரிட்டன் பிரதமர் மாநாட்டு நிகழ்ச்சிகளை ஆராய்ந்து முடிவு எடுக்க லோதியன் பிரபு என்பவர் தலைமையில் குழு ஒன்றை (Lord Lothian Committee) நியமித்தார்.

தாழ்த்தப்பட்டோர் இயக்கத் தலைவர்களில் அன்று நாடறிந்த தலைவர்களாக இருந்தவர்கள் டாக்டர் அம்பேத்கர், 1893லேயே 'பறையன்' என்ற தமிழ் இதழைத் தொடங்கிய ரெட்டமலை சீனிவாசன், எம்.சி.ராஜா ஆகியோரே ஆவர். இவர்களுக்கு அடுத்த நிலையில் ராஜ போஜ், கவாய், பி.பாலு, சிவராஜ், மீனாம்பாள் சிவராஜ், சிவசண்முகம் பிள்ளை ஆகியோர் இருந்தனர். இவர்களில் வயதில் மூத்தவரான ரெட்ட மலை சீனிவாசன், தென்னாப்பிரிக்காவில் காந்தியோடு பணி செய்து இந்தியா திரும்பியவர் வந்தவுடனேயே ஜஸ்டிஸ் இயக்கத்தில் சேர்ந்தார். 1923-26இல் சென்னை சட்டசபையில் உறுப்பினராக இருந்தவர். 1892 ஆதி திராவிட மகாஜன சபாவைத் தொடங்கியவரும் இவர்தான்.

சிறையில் இருந்த காந்தியடிகள் 11.03.1932இல் தாழ்த்தப்பட்டோருக்கான தனித்தொகுதிக்கு தன்னுடைய எதிர்ப்பினை மீண்டும் தெரிவித்து, பிரிட்டன் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். இக்கடிதம் எழுதிச் சில நாட்களுக்குள் (29.03.1932) எம்.சி. ராஜாவுக்கும் இந்து மகாசபைத் தலைவர் டாக்டர் பி.எஸ். மூஞ்சேவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுகிறது. காங்கிரசு எதிர்ப்பிலும் தாழ்த்தப்பட்டோர் நலனிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்த எம்.சி.ராஜா திடீரென்று தாழ்த்தப்பட்டோர் தனித்தொகுதி கோரிக்கையைக் கைவிட்டு விட்டு பொதுத் தொகுதி முறையினை ஏற்றுக் கொண்டு ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார். தாழ்த்தப்பட்டோரின் மற்றத் தலைவர்களுக்கு இவ்வொப்பந்தம் வியப்பிற்குரியதாக இருந்தது.

சிறிது நாட்கள் பொறுத்து இருந்து விட்டு அதே ஆண்டு ஏப்ரல் தொடக்கத்தில் டாக்டர் அம்பேத்கர் ஒரு அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையின் தமிழாக்கம் 10.04.1932இல் குடியரசு இதழில் வெளியாகிறது. திரு. ராஜாவோடு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்பு டாக்டர் மூஞ்சே என்னோடு முதலில் விவகாரம் ஆரம்பித்தார். புது டெல்லியில் மூன்று நாட்களாக நாங்கள் இதைப்பற்றி விவாதித்தோம். பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் 3ஆம் தேதி வரை எங்களுடைய தர்க்கவாதம் நடந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஐந்து வருட காலத்திற்கு மட்டும் தனித்தொகுதி கொடுக்கலாமென்று டாக்டர் மூஞ்சே கூறினார் நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் எங்களுடைய விவகாரம் முறிந்தது. அந்தச் சமயத்தில் டாக்டருக்கு திரு. ராஜாவைப் பற்றிய ஞாபகமே இருந்ததில்லை. திரு. ராஜா தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியென்று அவர் அந்தக் காலத்தில் நினைத்திருக்கவில்லை.

இதற்கிடையில் நடந்த இன்னொரு விசயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அகமதாபாத்தில் All India Depressed People Federation (அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பு) என்ற பெயரில் ஒரு மாநாட்டை காங்கிரசு இயக்கத்தினர் பண்டித மதன் மோகன்மாளவியாவின் தூண்டுதலின் பேரில் நடத்தினர். இந்த மாநாட்டின் முன்னணித் தலைவராக எம்.சி.ராஜா அறிமுகப்படுத்தப்பட்டார். இந்த மாநாட்டிற்குத் தமிழ்நாட்டிலிருந்து தாழ்த்தப்பட்டோர் தலைவர்களான என்.சிவராஜ் (பின்னாளில் சென்னை மேயர்) தர்மலிங்கம் பிள்ளை ஆகியோரை அனுப்பி வைப்பதில் காங்கிரசு இயக்கத்தினர் பெருமுயற்சி எடுத்தனர். என்.சிவராஜின் வகுப்புத் தோழரான ஆந்திர தலைவர் டி.பிரகாசாவைக் கொண்டு அவரை மனம் மாற்றினார். எம்.சி. ராஜாவின் நண்பரான வரதாச்சாரியார் தன்னுடைய மற்றுமொரு நண்பர் தர்மலிங்கம் பிள்ளையை மனம் மாற வைத்தார். இந்தத் திரைமறைவுச் செய்தியை வெளிப்படுத்தும் யூஜின் இர்சிக் இதற்கு ஆதாரமாக அரசு ஆவணங்களையே முன் வைக்கிறார்.

இரண்டாம் வட்டமேசை மாநாட்டின் முடிவுகள் விரைவில் பிரிட்டன் பிரதமரால் அறிவிக்கப்படும் சூழ்நிலை உருவாகியது. 1932 ஜூலையில் (10.07.1932) பம்பாயில் காங்கிரசுக்கு ஆதரவாக தாழ்த்தப்பட்டோர் மாநாடு ஒன்று கூட்டப் பெறுகிறது. இந்த மாநாட்டில் அம்பேத்கரின் ஆதரவாளர்களுக்கும் எம்.சி. ராஜாவின் ஆதரவாளர்களுக்கும் (தனித்தொகுதி முறை வேண்டுபவர்களுக்கும் அதனை கைவிட்டவர்களுக்கும்) இடையே மோதல் நிகழ்கிறது. ஒருவர் சாகிறார். 50 பேர் காயப்படுகிறார்கள். முடிவு எதனையும் எடுக்காமலேயே மாநாடு குழப்பத்தில் முடிகிறது. இந்த மாநாடு தொடங்குவதற்கு முன்னரே பிரிட்டன் பிரதமரின் தீர்ப்பை விரைவுபடுத்த அம்பேத்கர் லண்டனுக்கு மீண்டும் சென்று விட்டார்.

1932 ஆகஸ்டு மூன்றாம் வாரத்தில் (17.08.1932) பிரிட்டன் பிரதமர் 'ராம்சே மெக்டோனால்ட்' வட்டமேசை மாநாட்டில் கொள்கையை அறிவிக்கிறார். இதன்படி பொதுத்தொகுதிகளில் வாக்களிக்கும் உரிமையோடு தாழ்த்தப்பட்டோர் தனித்தொகுதி உரிமையினையும் பெற்றனர். அதாவது பிளவுபடாத அன்றைய சென்னை மாகாணத்தில் சில தொகுதிகளில் பொது வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்களோடு அத்தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்காக தாழ்த்தப்பட்டோர் மட்டும் வாக்களித்து ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினரையும் தேர்ந் தெடுப்பார்கள். அந்த இரட்டை வாக்குரிமையே தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்பட்ட சிறப்புரிமை ஆகும்.

இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு இரட்டை வாக்குரிமையின் அருமை குறித்து அம்பேத்கர் பின்வருமாறு கூறினார். இனப்பிரதிநிதித்துவத் தீர்வினால் அளிக்கப்பட்ட இரண்டாவது வாக்குரிமை என்பது விலை மதிப்பற்றதொரு சலுகை. ஒரு அரசியல் ஆயுதம் என்கிற முறையில் பார்க்கும்போது அதன் மதிப்பு கணிப்பிற்கு அப்பாற்பட்டது.

இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்ப்பை எதிர்பார்த்து சிறையிலிருந்து காந்தியடிகள் *11.03.1932*லேயே பிரிட்டன் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதி உருவாக்கும் முடிவினை மேன்மை தாங்கிய மன்னரரசு அறிவிக்கு மானால் நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்பதை அவ்வரசுக்கு மரியாதையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன்படியே இனப்பிரதிநிதித்துவத் தீர்ப்பு அளிக்கப்பட்ட மறுநாள் *(18.08.1932)* அத்தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டாலொழிய நான் உத்தே சித்துள்ள உண்ணாவிரதம் வருகின்ற செப்டம்பர் மாதம் 20ஆம் நாள் மதிய நேரத்திலிருந்து சாதாரண முறையில் நடைமுறைக்கு வரும்' என்று கடிதம் எழுதினார் காந்தியடிகள். பிரிட்டன் பிரதமர் இதற்கு செப்டம்பர் 8ஆம் நாள் எழுதிய கடிதத்தில் *(08.09.1932)* 'இன்று பயங்கரமான குறைபாடுகளினால் துன்புற்றுக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வருங்காலத்தில் அவர் தம் நலனில் மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தும் விதத்தில், சட்டமன்றங்களில் அவர்கள் செல்வாக்கை ஏற் படுத்தும் விதத்தில் சட்டமன்றங்களில் அவர்கள் சார்பில் பேசுவதற்கு அவர்களாலேயே ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையுள்ள பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் வாய்ப்பினைத் தடுத்திடுவதற் காகவே இத்தகைய உண்ணாவிரதத்தை நீங்கள் மேற்கொள்ளப் போகி றீர்கள்' என்று குற்றம் சாட்டினார். இதையும் மறுத்து ஒரு கடிதம் எழுதி விட்டு காந்தியடிகள் குறித்த நாளில் *(20.09.1932* செவ்வாயன்று*)* தன்னு டைய உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

அதைத் தொடர்ந்து நாடெங்கிலும் காங்கிரசு இயக்கத் தலைவர் கள் பரபரப்படைந்தனர். காந்தியாரை வேண்டுமென்றே சிக்கலில் மாட்டிவிடவும், பழிவாங்கும் உணர்ச்சியோடும் பிரிட்டிஷ் பிரதமர் இனவாரித் தீர்ப்பை அளித்ததாக பட்டாபி சீத்தாராமையா குறிப்பிடு கிறார். தாழ்த்தப்பட்டோருக்கு காங்கிரசு இயக்கமே பாதுகாப்பு என்கிற கருத்து நாடெங்கிலும் பரப்பப்பட்டது. தாழ்த்தப்பட்டோருக்கான தனித்தொகுதி கோரிக்கையை எதிர்த்து நாடெங்கிலும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டு தேசியக் கவிஞர்களான நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையும். தேசிய விநாயகம் பிள்ளையும், தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி முறை வேண்டாம். பொதுத் தொகுதியே போதுமென்று கவிதை எழுதினர். அதே நேரத்தில் காந்தியடிகளுடைய கருத்தை மறுத்தும் தமிழ்நாட்டில் பல குரல்கள் எழுந்தன. 'காந்தி கண்டன கீதம்' என்ற பெயரில் கவிதை நூல் ஒன்றும் வெளிவந்தது. அந்நூலில் 'சாற்றிடும் அரிசனப் பெயர் எதற்குதவும் - அது தாழ்ந்தவரைக் கைதூக்குமா' என்ற காந்தியடிகள் பயன்படுத்திய அரிசன் என்ற சொல்லுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. பாம்புக்கு வால் காட்டி மீனுக்குத் தலை காட்டும் பார்ப்பன தாசர் காந்தி என்றும் கவிதைகள் எழுந்தன.

இதற்கிடையில் செப்டம்பர் 20ஆம் தேதிக்குள் காங்கிரசு தலைவர்கள் பம்பாயில் கூடினர். சர்.தேஜ் பகதூர் சாப்ரு, பண்டித மதன் மோகன் மாளவியா, எம்.ஆர். ஜெயகர் போன்ற காங்கிரசு சார்புடைய இந்து மதத் தலைவர்களும், இராஜாஜி, தேவதாசு காந்தி போன்ற காங்கிரசு தலைவர்களும் இந்து மகாசபைத் தலைவர் டாக்டர் மூஞ் சேயும் பம்பாயில் இருந்தனர். 'பொதுத் தொகுதியே போதும்' என்று மூஞ்சேயோடு ஐந்து மாதத்திற்கு முன்னரே ஒப்பந்தம் செய்து கொண்ட தமிழ்நாட்டுத் தாழ்த்தப்பட்டோர் தலைவரான எம்.சி. ராஜாவும் அவருடைய மராட்டிய நண்பர் பி. பாலுவும் பம்பாய் வந்து சேர்ந்தனர். இதற்கிடையில் பம்பாய் நகரத்தில் அம்பேத்கரின் பழைய நண்பரான அம்ரித்லால் தக்கர் (தக்கர் பாபா) அம்பேத்கரை அடிக்கடி சந்தித்து காங்கிரசு சார்பாக பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்.

காந்தியடிகள் உண்ணாவிரதம் தொடங்கிய செப்டம்பர் 20 செவ்வாய்க்கிழமையன்றே, பம்பாயில் இந்துத் தலைவர்களுடைய மாநாடு பிர்லா மாளிகையில் கூடுவதாக இருந்தது. பண்டித மதன்மோகன் மாளவியா, சர். தேஜ் பகதூர் சாப்ரு, காங்கிரஸ் தலைவர் இராஜாஜி, சர். சுநிலால் மேத்தா, சர். புருஷோத்தம் தாஸ் தாகூர் தாஸ், சேட் மதுராதாஸ், வாசன்ஜி, ஜி.டி. பிர்லா, எம்.ஆர். ஜெயகர், டி. பிரகாசம், மூஞ்சே, பாபு இராசேந்திர பிரசாத் ஆகியோர் பம்பாய் நகர் வந்து சேர்ந்தனர். இந்தத் தலைவர்களை டாக்டர் அம்பேத்கரும், சோலங்கியும் சந்தித்துப் பேசினர். காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்த ஆறு நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளை, ஏரவாடா சிறையில் அவருக்கு அருகிலேயே இருந்து நேரில் கண்டவரான அவரது பணியாளர் பியாரிலால், தன்னுடைய நூலில் 42 பக்கங்களில் தந்து இருக்கிறார். அவர் தரும் செய்திகளைத் தொகுத்துக் காண்பது புனா ஒப்பந்தம் ஏற்பட்ட முறையினை விளங்கிக் கொள்ள மேலும் உதவும்.

20.09.1932 செவ்வாய் முற்பகல் *11.30* மணிக்கு வெந்நீரில் சிறிது எலுமிச்சைச் சாறும் தேனும் கலந்து காந்தியடிகள் பருகினார். *12.00*

மணியிலிருந்து அவரது உண்ணாவிரதம் நடைமுறைக்கு வந்தது. மறுநாள் 21ஆம் தேதி அவர் சிறைக்குள் தனிப்பிரிவுக்கு மாற்றப்பட்டார். சர்தார் வல்லபாய் பட்டேலும் காந்தியடிகளின் செயலாளர் மகாதேவ தேசாயும் அவரது அருகில் இருந்தனர். பெண்கள் சிறையில் இருந்த சரோஜினி நாயுடு தனிப்பிரிவுக்கு கொண்டு வரப்பட்டு காந்திக்கு உதவி செய்து கொண்டு இருந்தார். மறுநாள் 22ஆம் தேதி சபர்மதி சிறையில் இருந்த கஸ்தூரிபாய் காந்தி கணவருக்கு உதவி செய்ய ஏரவாடா சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்.

20ஆம் தேதி அன்றே இந்து மிதவாதக் கட்சித் தலைவர்களும் பம்பாய் நகரத்தில் பிர்லா மாளிகையில் அம்பேத்கருடன் பேச்சுவார்த் தையைத் தொடங்கி வைத்தனர். சர். தேஜ் பகதூர் சாப்ரு இதில் முன்னணி யில் இருந்தார். இங்கிலாந்து பிரதமர் அளித்ததை விட அதிகமான தொகுதிகளை அளிக்க மேற்குறித்த தலைவர்கள் தங்கள் இசைவைத் தெரிவித்தனர். அன்று மாலை இரண்டு மணி நேரத்தில் தானொரு திட்டத்தோடு வருவதாகச் சொல்லிவிட்டு அம்பேத்கர் சோலங்கியோடு அவ்விடத்தை விட்டுச் சென்றார். பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த தலைவர்களுக்கு காந்தியடிகள் தங்கள் திட்டத்தை ஏற்பாரா என்ற ஐயப்பாடு ஏற்பட்டு புனா வந்து சேர்ந்தனர். அவர்களோடு காந்தியடி களின் மகன் தேவதாஸ் காந்தியும் இருந்தார். மறுநாள் 21ஆம் தேதி காலை ஏழு மணிக்குச் சிறை அலுவலகத்தில் அவர்கள் காந்தியடிகளைச் சந்தித்தனர். அப்போது சரோஜினி நாயுடுவும் உடன் இருந்தார். பேச்சு வார்த்தை விவரங்களைக் கேட்டுக் கொண்ட காந்தியடிகள், 'நான் முதலில் டாக்டர் அம்பேத்கரையும், ராவ்பகதூர் எம்.சி. ராஜாவையும் நேரில் சந்தித்து அவர்கள் மனதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டார். அப்போதே அவருடைய உடல்நிலை சற்றுத் தளர்ந்திருந்தது. அதே நாளில் புனா நகரத்துத் தாழ்த்தப்பட்டோர் தலைவரான ராஜபோஜ் தனது நண்பருடன் வந்து காந்தியடிகளைச் சந்தித்து, அவருக்குத் தன் ஆதரவினைத் தெரிவித்துக் கொண்டார். அன்றே பண்டித மதன்மோகன் மாளவியாவும், எம்.சி. ராஜாவும் புனாவுக்கு வரவழைக்கப்பட்டனர்.

மறுநாள் சாப்ருவின் வேண்டுகோளின்படி அம்பேத்கர் பம்பாயி லிருந்து புனா நகரம் வந்து சேர்ந்தார். இதற்கிடையில் காந்தியடிகள் புனாவில் தங்கி இருந்த இராஜாஜியையும், இராசேந்திர பிரசாத்தையும் தன்னைச் சிறையில் வந்து சந்திக்குமாறு அழைத்தார். 'நீங்கள் நேற்று தந்த திட்டத்திலே ஒரு பெரிய குறைபாடு உள்ளது. இதனால் தாழ்த் தப்பட்டோர் மத்தியில் கூட்டுத்தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக் கப் பட்டவர் தனித்தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பிரிவு உண்டாகும். அதனால் உயர்வு மனப்பான்மையும், தாழ்வு

மனப்பான்மையும் அவர்களிடத்தில் உண்டாகும். எனவே இதற்கு நான் சம்மதிக்க முடியாது' என்று காந்தியடிகள் அவர்களிடம் கூறி அனுப்பினார்.

புனா நகரத்துக்கு வந்திருந்த அம்பேத்கரோடு வெளியில் இருந்த தலைவர்களில் சாப்ருவும், எம்.ஆர். ஜெயகரும் மறுபடியும் பேச்சு வார்த்தைத் தொடங்கினர். பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட வில்லை. ஜெயகரின் குரலில் தொனித்த ஏமாற்றத்தைக் கண்ட அங்கிருந்த காங்கிரசுத் தலைவர்கள் அம்பேத்கரை ஏசத் தொடங்கினர். ஜெயகரும், சாப்ருவும் மீண்டும் காந்தியடிகளைச் சிறையில் சந்தித்தனர். காந்தியடிகளை அம்பேத்கர் சிறையில் நேரில் சந்தித்தால் அவருடைய பிடிவாதம் தளர்ந்து போகும் என்று நம்பி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். இதற்கிடையில் ராவ் பகதூர் எம்.சி. ராஜாவும் அவரது நண்பர் பி. பாலுவும் காந்தியடிகளைச் சிறையில் சந்தித்தனர். எம்.சி. ராஜா இந்து மகாசபைத் தலைவர் டாக்டர் மூஞ்சேயோடு கூட் டுத்தொகுதி முறை போதுமென்று ஓர் ஒப்பந்தம் செய்து இருந்தார். இப்பொழுது ஒப்பந்தம் ஏற்பட தங்களால் ஆன எல்லா முயற்சிகளும் செய்வதாகக் காந்தியடிகளிடம் உறுதியளித்தனர்.

அன்று *(22.09.1932)* பிற்பகல் சிறையில் இருந்து காந்தியடிகளைச் சந்திக்க டாக்டர் அம்பேத்கர் தன் நண்பர்களுடன் வந்து சேர்ந்தார். 'மகாத்மாவே, எங்களிடம் நீங்கள் நியாயமில்லாமல் நடந்து கொள்கிறீர் கள் (Mahatmaji, you have been very unfair to us) என்று அம்பேத்கரே பேச்சைத் தொடங்கினார். பேச்சு வார்த்தையின் போது ஒரு விசயத்தை மட்டும் அவர் திரும்பத் திரும்பக் கூறினார். எல்லோருக்கும் அந்த வாக்கியம் மீண்டும் மீண்டும் கேட்டது. 'எனக்கு (எங்களுக்கு) உரிய நட்ட ஈடு வேண்டும்' (I want my compensation) என்பது தான் அது.

காந்தியடிகள் முதல் நிலைத் தேர்வுக்குழு (Panel) திட்டத்தைத் தான் ஏற்றுக் கொண்டால் அது தாழ்த்தப்பட்டவர்களைப் பிளவுபடுத்தும் என்று அவரிடம் தன் கருத்தை விளக்கினார். அம்பேத்கரும் அவருடைய நண்பர்களும் காந்தியடிகளின் அன்புப்பிடியில் இறுகிப் போயிருந்தனர். அம்பேத்கர் மனத்தில் திருப்புமுனை ஏற்பட்டது. 'மாகத்மாவே கூட்டுத் தொகுதி முறையை ஏற்றுக் கொண்டு நான் உங்களுக்குச் சலுகை அளித்து விட்டேன்' என்று அம்பேத்கர் கூறினார். மற்ற விசயங்களைப் பற்றி வெளியில் உள்ளவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்துமாறு காந்தியடிகள் கூறினார்.

இதற்கிடையில் பம்பாயில் கூடிய இந்துமகாசபைக் கூட்டத்தில், வகுப்புவாரித் தீர்ப்பினை நிறுத்தி வைக்குமாறு கடிதங்களும் தந்திகளும் பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்புமாறு சுநிலால் மேத்தா பொதுமக்களுக்கு

வேண்டுகோள் விடுத்தார். மொத்தத்தில் பம்பாயில் நிலைமை மோசமடைந்து கொண்டு வந்தது.

மறுநாள் வெள்ளிக்கிழமை நம்பிக்கைக் கதிர்கள் தோன்ற ஆரம்பித்தன. டாக்டர் அம்பேத்கரோடு அவரது தென்னிந்திய, வங்காள நண்பர்களும் வந்து சேர்ந்திருந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த 71 இடங்களுக்குப் பதிலாக அம்பேத்கர் 197 இடங்களைக் கேட்டார். இடங்களின் எண்ணிக்கையை பாஹ்லேயுடனும் தக்கர் பாபாவுடனும் பேசி முடிவு செய்து கொள்வது என்று முடிவாயிற்று. மத்திய அசெம்பிளியில் தாழ்த்தப்பட்டோருக்கு 18% இட ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட்டது. பிற்பகல் மணி 4 ஆகிவிட்டது. ஆனால் பேச்சு வார்த்தை சிறிதளவே முன்னேற்றம் கண்டு இருந்தது. டாக்டர் அம்பேத்கரும் அவருடைய நண்பர்களும் ஒவ்வொரு கட்டத்திலும் நின்று போராடினார்கள். (The redoubtable Doctor. supported by his colleagues fought every inch of ground) இதற்கிடையில் காந்தியடிகள் உடல்நிலை மோசமாகிக் கொண்டு வந்தது. சலுகைக்குரிய காலம் முடிந்ததும் அது குறித்து மீண்டும் பொது வாக்கெடுப்பு (Referandum) நடத்த வேண்டும் என்ற அம்பேத்கரின் கோரிக்கையைச் சாப்ரு திட்ட வட்டமாக மறுத்தார்.

இதற்கிடையில் அவசர அவசரமாகச் சிறைக்குச் சென்று தந்தையைச் சந்தித்து வந்த தேவதாஸ் காந்தி, பொதுவாக்கெடுப்பு விசயத்தில் விட்டுக் கொடுக்குமாறு தனிப்பட்ட முறையில் அம்பேத்கரிடம் கேட்டுக் கொண்டார். அன்று மாலை 4 மணிக்கு சிறையில் தலைவர்கள் காந்தியடிகளைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நேரமோ இரவு ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. டாக்டர் அம்பேத்கர் சிறையில் இருந்த காந்தியடிகள் தன்னுடைய பொது வாக்கெடுப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வார் என்ற உறுதியான நம்பிக்கையோடு சந்திக்க வந்தார். காந்தியடிகளும் அதை ஏற்றுக் கொண்டார்.

மறுநாள் (24.09.1932) சனிக்கிழமை பேச்சு வார்த்தை மீண்டும் தொடர்ந்தது. ஒதுக்கப்படும் இடங்களில் எண்ணிக்கை 147 என்று முடிவு செய்யப்பட்டது. எத்தனை ஆண்டுகாலம் கழித்து மீண்டும் பொது வாக்கெடுப்பு நடத்துவது என்று முடிவு செய்ய அன்று நண்பகல் மீண்டும் காந்தியடிகளைச் சந்திக்க அம்பேத்கர் சிறைக்கு வந்தார். அவரோடு டாக்டர் சோலாங்கியும் இராஜாஜியும் வந்தனர். குறைந்தது 10 ஆண்டுகள் என்ற தன் கருத்தைக் காந்தியடிகள் ஒத்துக்கொள்வார் என்று அம்பேத்கர் எண்ணினார். காந்தியடிகள் 5 ஆண்டுகள் என்ற தன்னுடைய கருத்தில் உறுதியாக நின்றார். உறுதியான குரலில் அவர் அம்பேத்கரிடம் கூறினார். எது வேண்டும்? 5 ஆண்டுகள் அல்லது என்னுடைய உயிர். அம்பேத்கர் 5 ஆண்டுகள் என்கிற கால அளவிற்கு இணங்கினார். அன்று பிற்பகல் 3

மணிக்கு இராஜாஜி ஒப்பந்த நகலை காந்தியடிகளிடம் கொண்டு வந்து காட்டினார். உடனடியாக தேஜ்பகதூர் சாப்ரு, டாக்டர் அம்பேத்கர், எம்.சி. ராஜா, மதன்மோகன்மாளவியா ஆகியோர் ஒப்பந்தம் எற்பட்ட செய்தியைப் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தந்தி மூலம் அனுப்பினர்.

பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை எற்றுக் கொண்ட தகவலை *(26.09.1932)* திங்கள் பிற்பகல் 4.15 மணிக்கு சிறைத்துறைத் தலைவர் கர்னல் டயல் (Dyole) காந்தியடிகளிடம் தெரிவித்தார். அதற்குரிய ஆவணத்தையும் கொடுத்தார். மாலை 5.15 மணிக்குக் காந்தியடிகள் தன் மனைவி கொடுத்த ஆரஞ்சுப் பழச்சாற்றைப் பருகி உண்ணாவிரதத்தை முடித்தார். அப்போது சர்தார் வல்லபாய் படேல், மகாதேவ தேசாய், சரோஜினி நாயுடு, கவிஞர் தாகூர், அம்பாலா சாரா பாய் அவரது குடும்பத்தினர், நேருவின் தாயார் சொரூபராணி, நேரு ஆகியோர் அங்கிருந்தனர்.

மேற்குறித்த செய்திகள் அனைத்தும் நிகழ்ச்சிகளை நேரில் கண்ட வரான பியாரிலால் எழுதிய நூலில் 42 பக்கங்களில் *(பக் 40-81)* வருணிக் கப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட சூழ்நிலையைக் குறித்து சில ஆண்டுகள் கழித்து டாக்டர் அம்பேத்கர் பின்வருமாறு எழுதுகிறார். இயற்கையாக அந்த நேரத்தில் நாயகனாக (Man of the moment) அல்லது கதையின் வில்லனாகக் (Villain of the piece) கருதி அனைத்துக் கண்களும் என் பக்கம் திரும்பின. இரு மாறுபட்ட முடிவுகளிடையே ஒன்றினை நான் தேர்வு செய்ய வேண்டியிருந்தது. காந்தியடிகளை நிச்சயம் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு பொது மனிதத்தன்மையின் ஒரு பகுதியாக இயங்கி வந்த அந்தக் கடமை என் முன்னாலிருந்தது. தீண்டத்தகாதவர் எனக் கருதப்படுகிறவர்களுக்கு பிரதமர் அளித்திருந்த அரசியல் உரிமைகளைக் காக்கும் பிரச்சினையும் என் முன்னாலிருந்தது மனிதத் தன்மையின் அழைப்புக்குக் குரல் கொடுத்து திரு. காந்தியடிகளுக்கு திருப்தியான வகையில் இனப்பிரதிநிதித்துவத் தீர்ப்பினைத் திருத்தியமைக்க ஒப்புக் கொண்டு திரு. காந்தியின் உயிரைக் காப்பாற்றினேன்' என்கிறார் அம்பேத்கர்.

செப்டம்பர் 24ஆம் தேதி மாலை ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. பொதுத் தொகுதியில் தனித்தொகுதி முறையைக் கைவிடுவது என்பதும், இனவாரித் தீர்ப்பின்படி கிடைத்த 68 இடங்களுக்குப் பதிலாக 148 இடங்களைத் தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்குவது என்பதும் ஒப்பந்தத்தின் சாரம் ஆகும். இதன் மூலம் தாழ்த்தப்பட்டோர் தங்களுக்கு இனவாரித் தீர்ப்பின் மூலம் கிடைத்த இரட்டை வாக்குரிமையை இழந்து விடுகின்றனர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோர்களில் அம்பேத்கர்,

எம்.சி.ராஜா, சாப்ரு, மாளவியா ஆகியோர் பெயரால் உடனடியாக இங்கிலாந்துக்கும் டெல்லிக்கும் தந்திகள் அனுப்பப்படுகின்றன. ஒப்பந்தம் கையெழுத்தான மறுநாள் செப்டம்பர் 25ஆம் தேதி பம்பாய் வணிகர் சங்க கட்டிடத்தில், கையெழுத்திட்ட தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றும் சிலர் பம்பாய் நகரில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். உண்ணாவிரதத்தை முடித்த வுடன் காந்தியடிகள் தாழ்த்தப்பட்டோர் தலைவர்களுக்கு நன்றி தெரி வித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையில் அம்பேத்கர், ரெட்டமலை சீனிவாசன் ஆகியோருக்கும் எம்.சி. ராஜா குழுவினருக்கும் தனித்தனியே நன்றி தெரிவித்திருந்தார். ஒப்பந்தம் முடித்த ஐந்து மாத காலத்துக்குள் காந்தியடிகள் ஹரிஜன் என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். இந்த பத்திரிகையின் முதல் இதழுக்கு அனுப்பிய செய்தியில் தாழ்த் தப்பட்டோர் ஆலய நுழைவு பெரிய அளவிற்குப் பிரச்சனைகள் எதையும் தீர்த்து விடாது என்று அம்பேத்கர் குறிப்பிட்டு இருந்தார்.

1935 லேயே புனா ஒப்பந்தம் தோல்வியடைந்தது என்று டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டார். அதே ஆண்டில் காங்கிரசு இயக்கத்தின் வரலாற்றை எழுதிய பட்டாபி சீத்தாராமையர் ‘இனவாரித் தீர்ப்பின் ஒரு பகுதி புனா ஒப்பந்தத்தால் அழித்து எழுதப்பட்டது. இன்னுமொரு பகுதி அழித்து எழுதுவதற்காக எஞ்சி நிற்கிறது’ என்று வன்மம் நிறைந்த குரலில் எழுதியிருக்கிறார்.

1937 தேர்தலில் தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்பட்ட *151* இடங்களில் 78 இடங்களைக் காங்கிரசு கைப்பற்றியது. ஒதுக்கப் பட்டுள்ள இடங்களுக்கு காங்கிரஸ் திட்டங்களை ஏற்றுக் கொள்வதாக உறுதி கொடுத்த தீண்டத்தகாதவர் எனக் கருதப்படும் வேட்பாளர்களை காங்கிரஸ் இசைவுச் சீட்டில் (டிக்கெட்) போட்டியிட வைத்து வெற்றிக் கொள்வதில், ஒரு முழுமையான வலிமை வாய்ந்த சொல்லப் போனால், ஒரு பழியார்வம் மிக்க பங்கினையாற்ற காங்கிரஸ் தயங்கவில்லை. தனது நிதி வளத்தைக் கொண்டு காங்கிரஸ் தனித்த இலாபமடைந்தது.

இவ்வாறாக காங்கிரஸ் தனது அரசியல் வியாபாரத்தில் பெரும் பகுதி இலாபத்தைப் பெற்றது. அதிகபட்சமாக தமிழ்நாட்டின் 30 இடங் களில் 26 இடங்களையும் குறைந்த பட்சமாக பம்பாயில் 15 இடங்களில் 4 இடங்களையும் காங்கிரஸ் கைப்பற்றியது.

புனா ஒப்பந்தத்தை உருவாக்குவதில் காங்கிரசும் இந்து மகா சபையும், தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்களில் முக்கியமானவர் எம்.சி. ராஜா. இவர் தமிழ் நாட்டுக்காரர் என்பதால் முதலில் இவரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டுத் தாழ்த்தப்பட்டோர் தலைவர்களில் ஒருவர்.

தொழிற்சங்கத் தலைவரும் ஆவார். 1921-1924 சென்னை சட்டசபை உறுப்பினராகவும் 1924-26 மத்திய சட்டசபையில் ஒரே ஒரு தாழ்த் தப்பட்ட உறுப்பினராகவும் இருந்த எம்.சி. ராஜா பொது வாழ்க் கையிலும் அரசியல் அனுபவத்திலும் அம்பேத்கருக்கு முந்தியவராவார். மயிலாப்பூர்க்காரரான இவர் திரு.வி.க.வின் நண்பர். அவரோடு வெஸ்ட் லியன் மிசன் கல்லூரியில் பணிபுரிந்தவர். பின்னர் 1921-22 இல் பக்கிங்காம் ஆலையில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தில் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களை ஒன்றுபடுத்திச் சங்கம் வளர்த்தவர். 'நீங்கள் எங்கள் இனத்தாரைக் கொண்டு புரட்சி செய்வித்தால் அதன் பயனை மேல் சாதி யாரே அனுபவிப்பர்' என்று தன்னிடம் எம்.சி. ராஜா சண்டையிட்ட தாகத் திரு.வி.க தனது வாழ்க்கைக் குறிப்பில் எழுதுகிறார். 1926இல் மத்திய சட்டசபையில் இந்து மகாசபைத் தலைவர் டாக்டர் மூஞ்சே யைக் கடுமையாகத் தாக்கிப் பேசியவர். தனித்தொகுதி கோரிக்கையை முழுமையாக ஆதரித்தவர். இவர் அம்பேத்கருக்கு எதிராகத் திடீ ரென்று போட்டிச் சங்கத்தை ஆரம்பித்ததும், இனவாரித் தீர்ப்பிற்கு முன்னாலேயே அகமதாபாத்தில் போட்டி மாநாடு ஒன்றை காங்கிரசு ஆதரவோடு கூட்டியதும், புனா ஒப்பந்தத்திற்கு ஐந்து மாத காலத்திற்கு முன்னரே தனித்தொகுதி கோரிக்கையை விட்டுக் கொடுத்து இந்து மகாச பைத் தலைவர் டாக்டர் மூஞ்சேயோடு ஒப்பந்தம் செய்து கொண்டதும், பின்னர் ஒப்பந்தத்திற்குச் சற்று முன்னர் பம்பாயில் தாழ்த்தப்பட்டோர் மாநாடு கூட்டி ஆதரவு திரட்ட முயன்றதும் வரலாற்று நிகழ்ச்சிகளாகும். இவற்றிற்கான காரணத்தை மிக எளிதாகக் கண்டு உணர முடிகிறது. 'வட்டமேசை மாநாட்டுக்குத் தான் அழைக்கப்படாமல் புறக்கணிக்கப் பட்டதாகக் கருதி சாதி இந்துக்களிடம் எம்.சி. ராஜா அன்பு காட்டிக் கொண்டிருக்கிறார் என்று 1937இல் குறிப்பிடுகிறார்' அம்பேத்கர். இதை இன்னமும் விரிவாக ஜெய்சன் ஜேக்கப் எழுதுகிறார். 'மத்திய சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் ஒரே உறுப்பினராக விளங்கியவர் எம்.சி. ராஜா, வட்டமேசை மாநாட்டிற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் மற்றும் தாத்தா ரெட்டமலை சீனிவாசன் ஆகிய இருவரும் தேர்வு செய்யப்பட்ட பிறகும், 'நான் தேர்வு செய்யப்படவில்லையே' என்று பொறாமை கொள்ளாது ஆதரவு அளித்து வந்தவரின் மனத்தில், சாதி இந்து 'சாத்தான்கள்' புகுந்து கொண்டு அவரைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டு டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு எதிராகவே முடுக்கி விட்டு வெற்றியும் கண்டனர்.

புனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் ஒவ்வொருவரையும் இயன்றவரை தனித்தனியாக அறிந்து கொள்வது நல்லது. புனா நகரத்தில் இராமகிருஷ்ண பண்டார்கர் சாலையில் முதலாம் எண்ணுடைய இல்லத் தில் ஒப்பந்தத்தில் செப்டம்பர் 24இல் 23 பேர் கையெழுத்திட்டனர்.

கையெழுத்திட்டவர்கள் மறுநாள் பம்பாயில் ஒரு பெரிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அன்று (செப்டம்பர் 25) இந்து மகா சபையின் ஆதரவாளர்களான மேலும் 18 பேர் அதில் கையெழுத்திட்டனர்.

புனா நகரத்தில் ஒப்பந்தம் கையெழுத்து ஆனாலும் ஒப்பந்தத்தை உருவாக்கியவர்களில் காந்தியடிகளும், சர்தார் வல்லபாய் படேலும் காந்தியடிகளின் செயலாளர் மகாதேவ தேசாயும் சிறையில் இருந்த காரணத்தினால் அதில் கையெழுத்திடவில்லை. ஆனால் உண்மையில் இது காந்தியடிகளுக்கும் அம்பேத்கருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந் தம்தான்.

காந்தியடிகளினுடைய உண்ணாவிரதத்தை முன்னிறுத்தி அம்பேத் கரை இந்த ஒப்பந்தத்திற்கு இணங்க வைத்தவர்கள் இந்து மகாசபைத் தலைவரான மதன்மோகன்மாளவியாவும் சுயராஜ்ஜியக் கட்சி என்ற மிதவாதக் கட்சியின் தலைவர்களாக இருந்த சர். தேஜ் பகதூர் சாப்ருவும், எம்ஆர். ஜெயகரும் ஆகிய மூவர் தான். இடையிடையே இந்த முயற்சியில் அவர்களுக்கு இராஜாஜியும் உதவுகிறார்.

மதன்மோகன்மாளவியா, (1861-1946) அலகாபாத்தில் சிறீகவுட பிராமணர் குடும்பத்தில் பிறந்தவர். அதிலும் பழமைவாத 'சதுர்வேதி' என்னும் பிரிவைச் சேர்ந்தவர். இவரது தந்தை ரேவார். தர்பங்கா, காசி மகாராஜாக்களால் அவரது வேத சாத்திரப் புலமைக்காக ஆதரிக்கப் பட்டவர். 1906இல் இந்து மகாசபையைத் தொடங்கியவர்களில் மாளவியாவும் ஒருவர். இவரே காசி இந்து பல்கலைக் கழகத்தை நிறு வுவதற்குப் பெருமுயற்சி எடுத்தவர். 1931 முதலாம் வட்டமேசை மாநாட்டுக்கு ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டவர். வருணாசிரம தர்மத்தில் அழுத்தமான நம்பிக்கைக் கொண்டவர். கிறித்தவர்களாயும் முஸ்லீம்களாயும் மாறியவர்களை கங்கையில் முழுக்காட்டி (சுத்தி செய்து) ஸ்ரீராம் ஜெய்ராம் என்று கோசமிடச் செய்து மீண்டும் இந்து மதத்தில் சேர்த்தவர். மாளவியாஜி கவுட பிராமணர்களைத் தவிர வேறு யார் கையாலும் உணவு கொள்ளமாட்டார். நீரருந்த மாட்டார். என்று இவரைப் பற்றி சமகாலத்தவரான ராஜகுமாரி அமிருத கௌர் குறிப்பிடுகிறார்.

சர். தேஜ்பகதூர் சாப்ரு (1875-1949) வழக்கறிஞர் ஆன இவர் அலிகார் நகரில் காஷ்மீரி பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். பண்டித மோதிலால் நேருவும் சித்தரஞ்சன் தாசும் இவரது நெருங்கிய நண்பர்கள். அவர்களோடு சேர்ந்து காங்கிரஸ் மிதவாதக் கட்சியைத் தோற்றுவித்தவர். வைசிராயின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருந்தவர். பின்னாளில் இலண்டனில் உயர்நீதிமன்றத்தில் (Privy Council) பணியாற்றியவர்.

ஒப்பந்தம் தொடர்பாகப் பம்பாயில் நடந்த பேச்சு வார்த்தைகளில் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்டவர்களில் ஒருவர் டாக்டர் பி.எஸ்.மூஞ்சே எனப்படும் பாலகிருஷ்ண சிவராம மூஞ்சே ஆவார். *(1872-1948)* இவர் சுக்ல யஜூர் வேதப் பிராமணர்களில் 'தேசஸ்த' என்னும் பிரிவினைச் சேர்ந்தவர். இவர்தான் அப்போதைய இந்து மகாச பையின் தலைவர். ஆறடிக்கு மேலான உருவம். பயில்வான் போன்ற தோற்றமும், இராணுவ ஈடுபாடும் கொண்டிருந்ததால் இந்து மகாச பையினரால் ஃபீல்டு மார்ஷல் என்று அழைக்கப்பட்டவர். 'இந்து இராணுவக் கல்விச்சங்கம்' ஒன்றை நிறுவி அதன் சார்பாக 'பௌசலர்' இராணுவப் பள்ளியை நடத்தியவர். முதலாம் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு இராணுவத்தை இந்திய மயமாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுவித்தவர். புனா ஒப்பந்தத்திற்கு முன்னதாக அம்பேத் கருக்கு எதிராக இருந்த எம்.சி. ராஜா, பி. பாலு ஆகியோரின் குழு வினரை தனித்தொகுதி வேண்டாம் என்ற கோரிக்கைக்கு இணங்க வைத்து ஒப்பந்தம் போட்டவர். பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்ட இவர் புனா ஒப்பந்தத்தில் கையெழுத்து இடவில்லை. அதன் காரணமும் தெரியவில்லை.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மற்றொருவர் பி.எஸ். காமத் எனப் பட்ட பாலகிருஷ்ண சீதாராம காமத் என்பவராவார். *(1871-1945)* இந்து சரஸ்வத் பிராமணர் பிரிவைச் சேர்ந்தவர். இந்து மிதவாதத் தலைவர் களில் ஒருவர். மராட்டியத்தில் இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த இவர் புனாவில் குடியிருந்து வந்தார். தமிழ்நாட்டு வைணவ வடகலை ஐயங்காரான இராஜாஜி (திருமலை நல்லான் சக்கரவர்த்தி இராஜ கோபாலச்சாரியார்) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் மற்றொரு வர் ஆவார். பிராமண வகுப்பைச் சேர்ந்த கோவிந்த மாளவியா என்ப வரும் கையெழுத்திட்டு இருக்கிறார். கையெழுத்திட்டவர்களில் மற் றொருவரான ஆர்.கே. பாஹ்லே என்பவரும் உயர் சாதிப் பிராமணரே. இவர் பம்பாயில் தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர்.

பின்னாளில் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராய் இருந்த இராசேந்திர பிரசாத் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களில் மற்றொருவர். இவர் பீகாரில் பிராமணரை அடுத்த உயர்சாதியான காயஸ்த வகுப்பில் பிறந்தவர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஏ.வி. தாக்கர் பின்னாளில் 'தக்கர் பாபா' என்று அழைக்கப்பட்டவர். இவர் கோகரி என்ற வணிக சாதியைச் சேர்ந்தவர்.

உண்மையில் புனா ஒப்பந்தம் காந்தியடிகளுக்கும் அம்பேத் கருக்கும் ஏற்பட்டதுதான். ஆயினும் காந்தியடிகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. அவர் மகன் தேவதாஸ் காந்தி கையெழுத் திட்டு இருக்கிறார். பிராமணரல்லாதாரில் உயர் சாதியான குஜராத்திய

பனியா என்னும் வணிக சாதியில் பிறந்தவர். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போது இவர் திருமணம் ஆகாத இளைஞர். ஒப்பந்தம் முடிந்த ஓர் ஆண்டுக்குள் இவருக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தலைவர்களில் ஒருவரான இராஜாஜியின் மகளான லெட்சுமிக்கும் திருமணம் நடக்கிறது. இந்தியாவின் கோடீஸ்வரர்களில் ஒருவரான ஜி.டி.பிர்லா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கிறார். அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆர்.டி. பிர்லா (இராமேஸ்வரதாஸ் பிர்லா) என்பவரும் கையெழுத்திட்டிருக்கிறார்.

உயர்சாதி வணிகர்களான சங்கர்லால் பேங்கர் என்பவரும் சி.வி. மேத்தா என்கிற பார்சிக்காரரும் கையெழுத்திட்ட இன்னும் இருவர். மற்றும் ஒருவரான பி.சி. சோலங்கி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். பிஸ்வாஸ் (விஸ்வாஸ்) என்ற வங்காளியும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளார். இவரும் மேல்சாதியினர் என்று தெரிகிறது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஜி.கே. தியோதர் (தேவதர்) என்பவரும் மேல்சாதிக்காரரே.

ஆக மொத்தத்தில் 24.09.1932 பம்பாயில் மேலும் பதினெட்டு பேர் இந்துக்கள் மாநாட்டின் இறுதி அமர்வில் இந்த ஒப்பந்தத்தில் கை யெழுத்து இடுகின்றனர். இவர்களில் தமிழ்நாட்டுக்காரரான பத்திரிகை யாளர் கே. நடராஜன், அவர் மனைவியான காமகோடி நடராஜன், பண்டித ஹிருதயநாத் குன்ஸ்ரு, கே.ஜி. லிமாயே, டி.கோதண்டராவ், ஜி.கே. காட்கில், அவந்திபாய் கோகலே, கே. ஜெ. சித்தாலியா ராதா காந்த் மாளவியா, ஏ.ஆர்.பட் ஆகியோர் பிராமணர்களாவர்.

இவர்களில் மூவர் பெண்கள். ஹன்ஸா மேத்தா என்ற மற்றொரு பெண்மணி பரோடாவைச் சேர்ந்த திவான் மனுபாய் மேத்தாவின் மகள். புகழ்பெற்ற டாக்டர் ஜீவராஜ் மேத்தாவின் மனைவி. இலண்டனில் படித்தவர். புருஷோத்தம் தாஸ் தாகூர் தாஸ் (1879-1961) குஜராத்திய பனியா வகுப்பைச் சேர்ந்த ஜவுளி வியாபாரி. ஆங்கிலேயரிடம் 'பெரு வீரர்' (Knight) பட்டம் பெற்றவர். மதுராதாஸ் வசந்த்ஜிலால்சந்த் ஹிராசந்த் இருவரும் பார்சி பெருவணிகர்கள். ஹிராசந்த் கப்பல் வணிகம் செய்தவர். ஏனையோர் வல்லுபாய் சாமன்தாஸ், மனோகபேதார், சோலம், பிரதான் ஆகியோர் ஆவர். இவர்களில் யாரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகத் தெரியவில்லை.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதி நிதிகளில் அம்பேத்கர். திவான்பகதூர் ரெட்டமலை சீனிவாசன் ஆகியோர் ஓர் அணியினராவர். எம்.சி. ராஜா, பி.பாலு, கவாய். ராஜ போஜ் ஆகியோர் மற்றொரு அணியினராக நின்றிருக்கின்றனர்.

அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டு தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித் தொகுதி முறை வேண்டும் என்று போராடியவர்கள். அதில் வெற்றியும் பெற்றவர்கள். இந்த வெற்றியை எதிர்த்தே காந்தியடிகள் எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்தார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.சி.ராஜா இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கௌரவமும் தன்னிடமிருந்து ரெட்டமலை சீனிவாசனால் பறிக்கப்பட்டது என்று கருதினார். எனவே அம்பேத்கர் மீதும் ரெட்டமலை சீனிவாசன் மீதும் அவர் கோபம் கொண்டு இருந்தார். இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் கர்நாட கத்தைச் சேர்ந்த கவாய். குஜராத்தைச் சேர்ந்த ஜாதவ் ஆகியோரும் அவருக்குத் துணை நின்றனர். இவர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்களே. அம்பேத்கருக்கு எதிராக எம்.சி. ராஜா இவர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டார்.

எம்.சி. ராஜா மற்றுமொரு வேலையும் செய்தார். தாழ்த்தப் பட்டோர் தலைவர்களில் ஒருவரான பி.பாலு என்பவர் பம்பாயைச் சேர்ந்தவர். அம்பேத்கருக்கு எதிராக இவரையும் தம் அணியில் சேர்த்துக் கொண்டார். 10.07.1932. அன்று பம்பாயில் நடந்த தாழ்த்தப்பட்டோர் மாநாடு (எம்.சி. ராஜாவின் ஆதரவாளர்கள் நடத்தியது) கலவரத்தில் முடிந்தது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் தனித்தொகுதி கோரிக்கையை ஏற்று அறிவிப்பு வெளியிடுவதற்குச் சில மாதங்களுக்கு முன் நடந்தவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது 1931-இல் செப்டம்பரில் நடைபெற்ற இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் தாழ்த்தப்பட்டோர் தனித் தொகுதிக்காகப் போராடுகின்றனர். அந்தக் கோரிக்கையை எம்.சி. ராஜாவும் 1931 நவம்பர் வரை ஆதரித்து இருக்கிறார். பின்னர் அம்பேத் கரின் தலைமையை ஏற்க மறுத்திருக்கிறார். 17.08.1932 ஆம் நாள் தனித் தொகுதி கோரிக்கையை வேண்டாம் என்று டாக்டர் மூஞ்சேயுடன் 29.03.1932இல் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 10.07.1932இல் பம்பா யில் நடைபெற்ற மாநாட்டில் அவருடைய ஆதரவாளர்கள் அம்பேத்கரின் ஆதரவாளர்களுடன் மோதுகிறார்கள். ஆக மொத்தத்தில் காந்தியடிகள் உண்ணாவிரதம் தொடங்கும் முன்னரே தாழ்த்தப்பட்ட தலைவர்களில் ஒரு பாதியினரை, அம்பேத்கருக்கும் தனித்தொகுதி கோரிக்கைக்கும் எதிராகத் தங்கள் பக்கம் இழுப்பதில் காந்தியடிகளும் காங்கிரஸ் இயக்கத் தலைவர்களும் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

எம்.சி. ராஜாவின் ஆதரவாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவர் ராஜபோஜ், புனா நகரத்துக்காரரான இவர் அந்நகரில் பார்வதி கோயிலில் தாழ்த்தப்பட்டோர் நுழைவுக்காகப் போராட்டம் நடத்தித் தோல்வி கண்டவர். உண்ணாவிரதத்திற்கு முன்னரே அம்பேத்கர் அணி யினரையும், எம்.சி. ராஜா அணியினரையும் சந்தித்துப் பேச விரும்பிய காந்தியடிகள் தன்னுடைய விருப்பத்தை ராஜபோஜிடம் தான் தெரிவித்து உள்ளார்.

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முதல் நாள் எம்.சி. ராஜா தன்னுடைய பம்பாய் ஆதரவாளர் பி. பாலுவுடன் சிறைக்குச் சென்று காந்தியடிகளைச் சந்திக்கிறார். ஒப்பந்தம் ஏற்பட எல்லாவித முயற்சிகளும் செய்வதாக இருவரும் காந்தியடிகளிடம் உறுதி அளிக்கின்றனர். எந்த அரசியல் சட்டத்தையும் விட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உங்கள் வாழ்க்கை தான் உத்தரவாதம் என்று பாலு காந்தியடிகளிடம் கூறுகிறார். அந்த நேரத்தில் காந்தியடிகளுடன் இருந்த பியாரிலால் தன்னுடைய நூலில் இந்த வாச கத்தை குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பந்தம் உருவாகி 5 ஆண்டுகள் கழித்து 1937 தேர்தலில் காங்கிர சோடு கைகோர்த்து நின்றார் எம்.சி. ராஜா. தேர்தலுக்குப் பின் சென்னை மாகாணத்தில் இராஜாஜி தலைமையில் அமைந்த அமைச்சரவையிலும் இடம் பெற்றார். பின்னர் 1942இல் காங்கிரசில் இருந்து விலகினார். பின்னர் அவரும் அவரது புனா நகரத்து நண்பர் ராஜபோஜும் அம்பேத் கருடன் இணைந்தனர். 30.03.1942 இல் அம்பேத்கர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps) குழுவினரைச் சந்தித்தபோது எம்.சி. ராஜாவும் அவருடன் சென்றார். வரும் தலைமுறையினருக்குப் பாடமாகும் வரலாற்று நிகழ்ச்சி இது.

இனி, ஒப்பந்தக் காலத்திலும் அதன் பின்னரும் புனா ஒப்பந்தம் தமிழ்நாட்டில் உருவாக்கிய விளைவுகளையும், எதிர் விளைவுகளையும் தொகுத்துக் காண்பது நல்லது.

அம்பேத்கருடன் வட்டமேசை மாநாட்டுக்கு பிரதிநிதியாக அழைக்கப்பட்ட ரெட்டமலை சீனிவாசன் மதுராந்தகம் அருகிலுள்ள கோழியாலம் என்ற ஊர்க்காரர். 1891லேயே பறையர் மகாஜனசபை என்ற அமைப்பை நிறுவியவர். 1893இல் பறையன் என்ற பெயரோடு மாத இதழ் ஒன்றைத் துவக்கியவர். தென்னாப்பிரிக்காவில் சிறிது காலம் காந்தியடிகளுடன் இருந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பியவர். கடைசி வரை காங்கிரஸ் எதிர்ப்பாளராக இருந்தவர். 1924இல் ஆகஸ்டு 25இல் சென்னை சட்டசபையில், எந்தப் பொதுச் சாலையிலும் எந்தப் பொது இடத்திலும் தாழ்த்தப்பட்டோர் சென்று வரலாம் எனத் தீர்மானம் கொண்டு வந்து சட்டமாக்கியவர். 1937இல் இறந்த தன் மனைவியின் கல்லறையில்

கூட இந்தச் செய்தியைக் கல்லில் எழுதி வைத்தவர். இந்தியாவின் தாழ்த்தப்பட்டோர் தலைவர்களில் மற்றவர்கள் (மேயர்) என். சிவராஜ். தர்மலிங்கம் பிள்ளை, ஜே.சிவசண்முகம் பிள்ளை, எல்.பி.ஐ. பாலகுரு சிவம், மீனாம்பாள் சிவராஜ் (மேயர்) முனுசாமிப்பிள்ளை ஆகியோர் ஆவர்.

இவர்களில் சிவராஜ் வழக்கறிஞர். 1926-36 சென்னை சட்ட மன்ற உறுப்பினர், 1928-இல் சீனிவாசன் துவக்கிய அமைப்பின் செயலாளர். 1929 ஆதிதிராவிட மாகஜன சபை மாநாட்டுக்குத் தலைமை தாங்கியவர். பின்னாளில் மேயர். சைமன் குழுவைச் சந்தித்தவர். 'புனா ஒப்பந்தத்தில் நானும் கையொப்பமிட்டவனாக இருக்கின்ற போதிலும், அதனால் முழுமையாக ஏமாற்றப்பட்டிருக்கின்றேன்' (இந்தியா ஆண்டு அறிக்கை 1932இல் கல்கத்தா பாகம் 1 ப.19) 'உண்மை' மார்ச் 1-15 (92) ப.16) என்றவர். புனா ஒப்பந்தத்தில் இவர் கையெழுத் திட்ட செய்தி காங்கிரஸ் சார்பாக குறிப்புகளில் இல்லை. 1952-இல் வென்றார். 1964 செப்டம்பர் 29இல் காலமானார். இவரது மனைவி மீனாம்பாள் சிவராஜ் 1957இல் காங்கிரஸ் சீட்டில் சட்டமன்றம் சென்றார். ஜே. சிவசண்முகம் பிள்ளை பின்னாளில் சென்னை மேயர். 1952இல் சட்டப் பேரவைத் தலைவரானார்.

மொத்தத்தில் தாழ்த்தப்பட்டோர் சார்பில் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டவர்களில் அம்பேத்கர், கவாய் (கர்நாடகம்), தேவதர் டி.ஜாதவ் (குஜராத்), ராம் சேனாதிபதி (அஸ்ஸாம்), இவர்களைத் தவிர எம்.சி. ராஜா, பி.பாலு, ரெட்டமலை சீனிவாசன், சிவராஜ் ஆகியோர் தமிழ் நாட்டுக்காரர்களாகவே இருந்துள்ளனர்.

புனா ஒப்பந்தத்தைக் கண்டித்து அக்டோபர் மூன்றாம் வாரத்தில் சென்னையில் மாநாடு கூட்டி, தாழ்த்தப்பட்டோர் தலைவர்களான சிவசண்முகம் பிள்ளை, பாலகுருசிவம் இருவரும் தீர்மானம் நிறை வேற்றினர். இந்த மாநாட்டில் தாழ்த்தப்பட்டோர் சேனை(1928) அமைத்த பறைநாயுடு என்ற மேயர் சுந்தர்ராவ் நாயுடுவும், ஜஸ்டிஸ் இயக்கத்தின் சார்பில் குத்தூசி குருசாமியும் கலந்து கொண்டனர். இந்த மாநாடு அம்பேத்கருக்குப் போட்டியாக எம்.சி. ராஜா அமைத்த அரிஜன் சங்கத்தைக் கண்டித்தும் இருக்கிறது.

1937 தேர்தலுக்குப் பிறகு எம்.சி. ராஜா குழுவினர் காங்கிர சில் ஐக்கியமாயினர். எம்.சி.ராஜா, இராஜாஜியின் ஆட்சியில் அமைச்ச ராகவும் ஆனார். பின்னர் காங்கிரசிலிருந்து விலகினார். ராஜா 1943லும் சீனிவாசன் 1945லும் காலமானார்கள். சிவசண்முகம் பிள்ளையும் காங்கிரசில் சேர்ந்தார். மேயர் முனுசாமிப்பிள்ளையும் காங்கிரசில் சேர்ந் தார். சிவராஜ் மனைவி மீனாம்பாளும் சேர்ந்தார். 1950 அரசியல் சட்டத்

தில் தாழ்த்தப்பட்டோருக்காக 18 விழுக்காடு இடத்தை அம்பேத்கர் உறுதி செய்தார். இரட்டை உறுப்பினர் தொகுதிகள் அமைக்கப்பட்டன. காந்தியடிகள் உயிரோடு இருந்தால் இதை எதிர்த்திருப்பார். 1956இல் அம்பேத்கரும் காலமானார். சிவராஜ் குடியரசு கட்சி அமைத்தார். அதைக் கவாய் பின்னர் இரண்டாக்கினார்.

1957இல் தேர்தலில் ஆந்திராவில் இரட்டை உறுப்பினர் தொகுதியான பார்வதிபுரம் பொதுத் தொகுதியில் தோற்றுப் போன வி.வி.கிரி (பின்னாளில் குடியரசுத் தலைவர்) தாழ்த்தப்பட்டோர் தனித் தொகுதியை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். 1962 தேர்தலுக்கு முன்னர் 1961இல் அரசாங்கம் இரட்டை உறுப்பினர் தொகுதியைக் கைவிட்ட போது எதிர்ப்பே இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால் தாழ்த்தப்பட்டோருக்கு வலிமையான ஒரு இயக்கமோ, தலைவரோ அப்போது இல்லை. புனா ஒப்பந்தத்தின் பின்விளைவால் காங்கிரஸ் இயக்கம் தாழ்த்தப்பட்டோரைத் தன்னுள் வைத்திருக்க எல்லா முயற்சிகளையும் செய்தது. ஒப்பந்தம் முடிந்த 5 மாத காலத்தில் காந்தியடிகள் 'ஹரிஜன்' என்ற இதழைத் தொடங்கிவிட்டார்.

தமிழ்நாட்டில் நீதிக்கட்சியோடு (ஜஸ்டிஸ் இயக்கத்தோடு) தொடர்பு கொண்டிருந்த தாழ்த்தப்பட்டோர் இயக்கத்தைப் புனா ஒப்பந்தம் இரண்டாகப் பிளந்தது. அனைந்திந்திய அரங்கில் எம்.சி. ராஜா மூலமாக அம்பேத்கருக்குப் போட்டியாக ஒரு தலைமையினையும், சங்கத்தையும் காங்கிரஸ் உருவாக்கியது. புனா ஒப்பந்தம் மூலமாக இனவாரித் தீர்ப்பை எதிர்த்து வெற்றி பெற்றது. இறுதியில் தனித்த கொள்கையோடு தாழ்த்தப்பட்டோர் இயக்கம் ஒன்று வளர விடாமல் அவர்களைத் தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டது. எனவே இந்த ஒப்பந்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழ்நாட்டில் எழுந்த தாழ்த்தப்பட்டோர் எழுச்சியே ஆகும். நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இந்தியாவின் தேசிய இயக்கம் ஒரு வடிவத்தைப் பெறத் தொடங்கியது. அதே காலகட்டத்தில் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் இயக்கமும் எழுந்தது. அந்த இயக்கம் காங்கிரஸ் இயக்கத்திற்கு மாற்றாக எழுந்தது. ரெட்டமலை சீனிவாசனின் சகோதரி கணவரான க. அயோத்திதாசப் பண்டிதர் 'திராவிட பாண்டியன்' என்ற இதழை 1885லேயே தொடங்கினார். பின்னர் அந்த இதழே 'திராவிடன்' என்ற பெயரோடு வெளிவந்தது. ஆதிதிராவிட மகாஜன சபை என்கிற அமைப்பையும் இவர் தொடங்கினார். 'திராவிடம்' என்கிற சொல்லை ஒரு அரசியல் கருத்தோட்டமாக முதலில் முன் வைத்தவர் இவரே ஆவார். இவரது மைத்துனர் ரெட்டமலை சீனிவாசன் 1892ல் 'பறையர் மகாசபை' என்ற அமைப்பினையும் 'பறையன்' என்ற இதழையும் தொடங்கியதை முன்னரே கண்டோம். தாழ்த்தப்பட்டோர் மட்டும் வாக்களித்துத் தங்கள் பிரதி

நிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்து முதன்முதலில் திராவிடன் என்ற இதழிலேயே 1921இல் வெளிவந்தது. அப்போது அவ் விதழின் ஆசிரியராக ஜே.எஸ். கண்ணப்பர் என்பவர் இருந்தார். இந்தக் கருத்தையே 11 ஆண்டுகள் கழித்து வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் முன் வைத்தார்.

அயோத்திதாசப் பண்டிதரும் ரெட்டமலை சீனிவாசனும் வயதால் மட்டுமல்ல சமூகப் பணியாலும் அம்பேத்கரை விட மிக மூத்தவர்கள். இவர்களைத் தவிர எம்.சி. ராஜா, என். சிவராஜ்(மேயர்) சிவசண்முகம் பிள்ளை (மேயர்), முனுசாமிப் பிள்ளை, எல்.பி.ஐ பாலகுருசிவம் போன்ற நாடறிந்த தாழ்த்தப்பட்டோர் தலைவர்களும் தமிழ்நாட்டுக் காரர்கள், புனா ஒப்பந்தம் நடைபெறும்வரை இவர்கள் எல்லோரும் நீதிக்கட்சியோடு தொடர்புடையவர்களாகவும் சார்புடையவர்களாகவும் இருந்தனர்.

இந்தியாவின் வேறெந்த மாநிலத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்கு, நீதிக்கட்சி போன்ற ஒரு இயக்கம் பின் இருந்து துணை செய் தது இல்லை. புனா ஒப்பந்தத்திற்குப் பிறகு இவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ் இயக்கச் சார்பாளராக மாறிக் கரைந்து போனார்கள். அதன் பின்னர் 50 ஆண்டுகளுக்குத் தமிழ்நாட்டுத் தாழ்த்தப்பட்டோர் தங்களுக் கான ஒரு இயக்கம் இல்லாமல், தன்னுணர்ச்சியும் இல்லாமல் போயினர். 1947இல் நாடு விடுதலை பெற்றவுடன் அம்பேத்கருக்குப் பதிலாக தாழ்த் தப்பட்டோர் தலைவர்களில் மற்றொருவரை மந்திரியாக்க நினைத்தார். அப்போதும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மேயர் முனுசாமிப் பிள்ளையையே அம்பேத்கருக்குப் போட்டியாக உருவாக்க எண்ணினர். அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

புனா ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அன்றைய தலைவர்கள் மத்தியில் நிலவியிருந்த மனநிலையும் அவர்களுடைய எதிர்பார்ப்புகளும் அவர்கள் போட்ட கணக்குகளும் தவறாகப் போயிருப்பதைக் காலம் காட் டுகிறது. இதிலிருந்தே வரலாற்று மாணவர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். காந்தியடிகளின் உண்ணாவிரதம் அவர் தலைமையேற்ற காங்கிரஸ் இயக்கத்தால் முடிவு செய்யப்பட்டதல்ல. தன்னுடைய உள்ளொளி (Some secret strength and mystic ecstacy of the soul) தனக்கு அவ்வாறு ஆணையிட்டதாகக் காந்தியடிகள் கூறினார்.

காங்கிரஸ் இயக்கம் அன்றைக்கு அதை அப்படியே ஏற்றுக் கொண்டது. அக்காலத்தில் இந்த ‘உள்ளொளியை’ விமர்சித்தவர் பின்னாளில் இந்தியாவின் தலைவிதியை எழுதிய ஜவஹர்லால் நேரு ஒருவர் மட்டுமே. அவர் அப்பொழுது ‘நைனிடால்’ சிறையிலிருந்தார். அவர் தன்னுடைய சுயசரிதையில் பின்வருமாறு எழுதுகிறார். ‘அரசியல்

பிரச்சனையொன்றிற்கு மதம் தொடர்பான, உணர்வுப்பூர்வமான அவரது (காந்தியடிகளது) அணுகுமுறை எனக்குக் கோபத்தை உண்டாக்கிற்று. அது தொடர்பாகக் கடவுளை அடிக்கடி குறிப்பிடுவதும் எனக்குப் பிடிக்கவில்லை. உண்ணாவிரதம் இருப்பதற்கான நாளையும் கடவுளே குறிப்பிட்டார் என்கிறது போல அவர் கூறியிருந்தார். இப்படித்தான் பிறருக்கு முன்னுதாரணமாய் இருப்பதா?

பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்த இரட்டை வாக்குரிமையை அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் போராடிப் பெற்ற உரிமையை இந்து சமூகத்தின் நன்மைக்காக அவர்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதே காந்தியடிகளின் நோக்கமாகும். அம்பேத்கருக்கோ நாட்டு மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினரின் வாழ்வுரிமைப் போராட்டம் இது. காந்தியடிகளுக்கோ இது இந்து மதம் சார்ந்த பிரச் சினையாகவேப் பட்டது. எனவே தான் காந்தியடிகளின் மதம் சார்ந்த அணுகுமுறை ஜவஹர்லால் நேரு போன்ற சிந்தனையாளர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியிருக்கிறது.

எரவாடா சிறைச்சாலையிருக்கும் போது தாழ்த்தப்பட்டோருக்கு தனித்தொகுதி ஏற்பட்டதால் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுவதாக உண்ணாவிரதம் ஆரம்பித்தார். சிறைச்சாலையில் மூன்று தரம் கண்டேன். வாதாடி வெற்றி பெறுவதை இவர் தவிர்த்து உண்ணா விரதம் இருப்பது, வீரத்தன்மையை இழந்து இரக்கத்தைத் தேட வேண்டிய வரானார் என்பதைக் கண்டு என் மனமிரங்கி புனா ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டேன். இருபது வருடங்களாக அவர் கிளர்ச்சி செய்து வந்ததும் ஜாதி இந்துக்களின் கல்மனதினின்று நாருரிக்க அவரால் முடியவில்லை. தாழ்த்தப்பட்டவரை ஹரிஜனம் என்று இவர் பெயர் சூட்டி அழைத்து வருகிறார். ‘ஹரிஜனம்’ என்னுமோர் பத்திரிகையும் பிரசுரம் செய்து வருகிறார். அவர் மனம் போனபடி ஏதேதோ எழுதி வருகிறார். அவைகளில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோர் அபிப் பிராயம் அல்லவென்று சொல்லலாம் அது தன்னயதேட்டம். அவர் அசரீரி வாக்கைக் கேட்டறியும் அருள் பெற்ற ஒரு நல்ல ஆத்மா! என்று 1939இல் ரெட்டமலை சீனிவாசன் சினந்தும் கேலியாகவும் எழுதியிருப்பதும் வரலாற்று மாணவர்கள் அறிய வேண்டிய செய்தி யாகும்.

தனித்தொகுதி பற்றிய பொது வாக்கெடுப்பைப் பதினைந்து ஆண்டுகள் கழித்து, வைத்துக் கொள்ளலாமென்பது அம்பேத்கரின் கருத்தாகும். ஐந்தாண்டுகளுக்குள் தீண்டாமைக் கொடுமையும், பிற ஒடுக்குமுறைகளும் நாட்டில் முற்றிலுமாக அகன்றுவிடும் என்பது காந்தியடிகள் நம்பிக்கையாகும். இருவரின் நம்பிக்கைகளும் பலிக்க வில்லை. 1950இல் விடுதலை பெற்ற இந்தியாவில் அரசியல் சட்டம்

அமுலுக்கு வந்தபோது 30 ஆண்டுக் கால எல்லையோடு தனித்தொகுதி கள் உருவாக்கப்பட்டன. 1957க்குப் பிறகு அம்பேத்கர் உருவாக்கிய இரட்டை வாக்குரிமை முறையும் வி.வி.கிரி தொடுத்த வழக்கால் இல்லா மல் போயிற்று. இவையாவும் வரலாற்று மாணவர்களுக்கு மற்றுமொரு பாடமாகும். இன்றுள்ள தேர்தல் முறையில் தாழ்த்தப்பட்டோர் தனித்தொகுதி என்பது கட்சி அரசியலால் தன்னுடைய உண்மையான பொருளை இழந்து போய்விட்டது. இந்த நடைமுறை உண்மையும் வரலாற்று மாணவர்கள் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டியதாகும். புனா ஒப்பந்தம், 'பொய்யாய் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே' என்பது போலக் கலைந்து போயிற்று.

இந்த வரலாற்று நிகழ்வுகளின் பின்விளைவே மிகக் கடுமையான சொற்களுடன் கூடிய சுவரொட்டிகளாக வெளிப்பட்டிருக்கிறது. புனா ஒப்பந்தம் முடிந்து பல ஆண்டுகள் ஓடிப்போய்விட்டன. ஒப்பந்தத்தை உருவாக்கியவர்கள், துணை நின்றவர்கள், கையெழுத்திட்டவர்கள் யாரும் இன்று உயிரோடில்லை. ஆயினும் வரலாற்று நிகழ்வுகள் நின்று விடவில்லை. ஏனென்றால் இந்தியச் சமூகம் தொடர்ந்து மாற்றங்களுக்கு ஆளாகிக்கொண்டே இருக்கிறது. தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்கான போராட்டம் மீண்டும் கூர்மையடைந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், அரிஜன், செடியூல்டு என்று பிறராலும் சட்டத்தாலும் இடப்பட்ட பெயர்கள் வலுவிழந்து போய்க்கொண்டிருக்கின்றன. 'தலித்' (மண் சார்ந்தவர், மண்ணோடு சார்ந்தவர், மண்ணின் மக்கள்) என்று ஒடுக்கப்பட்டோர் தங்கள் பெயரைத் தாங்களே இட்டுக்கொண்டுள் ளனர். இந்திய மக்களின் வரலாறு ஒரு திருப்புமுனையை நெருங்குகிறது.

அடிகுறிப்புகள்

1. The Settlement arrived at is, so far as I can see a generous gesture on all sides. It is a meeting of hearts and my Hindu gratitudes is due to Ambedkar, Rao Behadur Srinivasan and their party on the one hand and Rao Bahadur M.C. Raja on the other. The collected works of Mahatma Gandhi, Vol.51, P.144 The publications Division, Ahamadabad (1972)
2. ஆங்கிலப் பேரகராதி தொகுத்த அறிஞர் ஜான்சனின் பெருமை சமகாலத்து மக்களால் உணரப்படவில்லை. ஜான்சனை மிகைப்படப் புகழ்ந்து, அவரது மாணவர் பாஸ்வெல் எழுதிய புத்தகமே அவரது புகழை உலகம் அறியக் காரணமாக இருந்தது. எனவே மிகைபடப் புகழ்ந்து எழுதப் படும் புத்தகங்களை 'பாஸ்வெலியானா' என்று கூறுவது ஆங்கிலத்தில் மரபு.
3. ஜெய்சன் ஜோக்கப், (மொ.ஆ) புனா ஒப்பந்தம், சென்னை 1988. ப.134
4. One hundred years of the Hindu (The Epic Stroy of Indian Nationalism) Madras, 1985.
5. புனா ஒப்பந்தம். ப.2
6. Dhananjay keer; Dr. Ambedkar Life and Mission. Popular Prakashan. Bombay. 1962. P.150
7. Ibid., PP. 155-156.
8. Ibid., The interests of the Untouchables are as dear to the Congress as the Interest of the any other body or of any other Individual throughout the length and breadth of India. Therefore I would most strongly resist any further special representation" P.175.
9. புனா ஒப்பந்தம், ப.41
10. மேலது. ப.70-72. 'இந்தக் குற்றச்சாட்டு 07.02.1932 பெரியாரின் குடியரசு இதழில் செய்தியாகவும் வந்துள்ளது. இந்த செய்தி அறிக்கையில், குற்றச்சாட்டைக் கூறியபோது 'இதை ருசுப்படுத்த என்னிடம் ஒப்புக் கொள்ளத்தக்க தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. காந்தியடிகளின் பக்தர்கள் யாராவது பாரக்க விரும்பினால் என் காரியாலயத்திற்கு அவர்கள் வரட்டும். அந்த தாஸ்தாவேஜுக்களை நான் காட்டு கிறேன்' என்றார். டாக்டர் அம்பேத்கார். பக்.70-72. பார்க்க: கழஞ்சூர் சொ. செல்வராஜி (தொ.ஆ) டாக்டர் அம்பேத் கார் அறிவுக் கொத்து ப.32
11. Dhanajay Keer, Dr. Ambedkar - Life and Mission, P.190.
12. The Times, Jan 31., 1948 obituary as quoted in Gandhi in London by James D. Hunt. P. 201.

13. *டாக்டர் அம்பேத்கார் அறிவுக்கொத்து ப.41*
14. Eugene Irschick. Tamil Revivalism in 1930s Cre-A., Madras April 1986, P.158-1591.
15. Dhananjay Keer, Dr. Ambedkar - Life and Mission, P.230
16. *புனா ஒப்பந்தம், ப.108*
17. *மேலது. ப.84*
18. *மேலது. ப.92*
19. *மேலது ப.98*
20. "It was a wanton attempt on the Premier's part to put Gandhi in the wrong. If he should opposed., this was a bounty with ta Vengence" Pattabi Sitaramayya. The History of the Indian National Congress, Vol.I (1885-1935) P.532.
21. *மணிநீலன் (முத்துக்கிருஷ்ணன்) காந்தியடிகள் கண்டன கீதம், உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு 1934, ப.11 (பி.யோகீசுவரன். தமிழ்க் கவிதையில் சமுதாயச் சிக்கல்கள் ப.150. 171ல் மேற்கோள்)*
22. Pyarelal, The Epic Fast, Ahamedabad, P.40 - 18
23. *புனா ஒப்பந்தம் ப.103-104*
24. M.L. Shahare. Dr. Bhim Rao Ambedkar- His Life and Wordk. NCERT, New Delhi, P.40
25. Pattabi Sitaramayya. The History of the Indian National Congress, Vol I P.40
26. *திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் பகுதி-2 மறுபதிப்பு. 1969. ப.495.*
27. *புனா ஒப்பந்தம் ப.*
28. *மேலது. மொழிபெயர்ப்பாளர் பிற்சேர்க்கை-6 ப.175.*
29. *மாளவியா, ஜெயகர், சாப்ரு, மூஞ்சே, காமத், தக்கர் பாபா உள்ளிட்ட தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்பிற்கு, பார்க்க*
30. Dictionary of National Biography (Volumes 1-40 Ed., by S.P. sen, Institute of Historical Studies, Calcutta. 1974.
31. "Your life is a greater guarantee to the Depressed classes than any other number of constitution" Pharelal. The Epic Fast. P. 59
32. *குடியரசு. 23.10.1932. பக் 13. அம்பேத்கர் அறிவுக்கொத்து பக்.67இல் காட்டிய மேற்கோள்.*
33. Pyarelal. The Epic Fast. P.11.
34. *ஜெயரதன் (தமிழாக்கம், ஜவஹர்லால் நேரு சுயசரிதை. பூரம் பதிப்பகம், சென்னை. 1981. ப.403*
35. *ரெட்ட மலை சீனிவாசன். திவான் பகதூர், ரெட்டமலை சீனிவாசன் சுயசரிதை, சென்னை, 1939, ப.21*

இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட சூழ்நிலையைக் குறித்து சில ஆண்டுகள் கழித்து டாக்டர் அம்பேத்கர் பின்வருமாறு எழுதுகிறார்.

'இயற்கையாக அந்த நேரத்தில் நாயகனாக (Man of the moment) அல்லது கதையின் வில்லனாகக் (Villain of the piece) கருதி அனைத்துக் கண்களும் என் பக்கம் திரும்பின. இரு மாறுபட்ட முடிவுகளிடையே ஒன்றினை நான் தேர்வு செய்ய வேண்டியிருந்தது.

காந்தியடிகளை நிச்சயம் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு பொது மனிதத்தன்மையின் ஒரு பகுதியாக இயங்கி வந்த அந்தக் கடமை என் முன்னாலிருந்தது.

தீண்டத்தகாதவர் எனக் கருதப்படுகிறவர்களுக்கு பிரதமர் அளித்திருந்த அரசியல் உரிமைகளைக் காக்கும் பிரச்சினையும் என் முன்னாலிருந்தது. மனிதத் தன்மையின் அழைப்புக்குக் குரல் கொடுத்து, திரு. காந்தியடிகளுக்கு திருப்தியான வகையில் இனப்பிரதிநிதித்துவத் தீர்ப்பினைத் திருத்தியமைக்க ஒப்புக் கொண்டு திரு.காந்தியின் உயிரைக் காப்பாற்றினேன்' என்கிறார் அம்பேத்கர்.

○ நூலிலிருந்து...

ER | Endless Readers
A writer only begins a book A reader Finishes it.
புத்தகங்களை இணையத்தில் பெற :
https://endlessreaders.in